# செயலாற்றுகை அறிக்கை

# 2014

## வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

இலங்கை

©2014 வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
செயலகம் (3 ஆம் மாடி)
த. பெ. இ: 277
கொழும்பு 00100
இலங்கை

info@erd.gov.lk
http://www.erd.gov.lk

# உள்ளடக்கம்


மேனோக்கு 01

நிறுவனக் கட்டமைப்பு 02

வெளிநாட்டு நிதியீடு 04


## பிரிவுகள் வாரியான செயலாற்றுகை


ஆசிய அபிவிருத்தி வங்கி, சீனாப்பிரிவு 11

ஆசிய அபிவிருத்தி வங்கி

சீனா

ஜப்பான், கொரியா, தாய்லாந்து, வியட்நாம், மலேசியா, மற்றும் சிங்கப்பூர் பிரிவு 19

ஜப்பான்

கொரியா

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதிப் பிரிவு 28

மத்திய கிழக்கு மற்றும் தென்னாசியப் பிரிவு 32

மத்திய கிழக்கு நாடுகள்

தென்னாசிய நாடுகள்

முன்னேற்றப் பொருளாதாரப் பிரிவு 41

ஐக்கிய நாடுகள் நிறுவனங்களும், தொழில்நுட்ப உதவிப்பிரிவும் 45

ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள்

தொழில்நுட்ப உதவி

மூலதனச் சந்தைப் பிரிவு 49

படுகடன் முகாமைத்துவப் பிரிவு 52

கொள்கைத் திட்டமிடல் பிரிவு 54

நிதி ரீதியான மீளாய்வு 55

# தூர நோக்கு

உயர்வான நடுத்தர வருமானத்தை அடைவதற்கு நாடு எழுச்சியூட்டப்பட்டதன் காரணமாக இலங்கையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு வெளிநாட்டு நிதியினைத் திரட்டுவதன் மூலமும், முகாமைத்துவம் செய்வதன் மூலமும் தேவையான அறிவு, மற்றும் நிபுணத்துவ ரீதியாக சிறந்த தரத்தை அடைதல்

# செயற்பணி

நாட்டின் நீண்ட காலக்கடனின் நிலைபேறான தன்மையை பேணும் அதே வேளை, இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஆதரவுடன் குறைந்த நிபந்தனைகளுடன் குறைந்த சாத்தியமான செலவில் வெளிநாட்டு நிதியினைத் திரட்டல்

# நோக்கங்கள்

- முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள துறைகளின் அபிவிருத்தித் தேவைகளுக்கு நிதி வழங்குவதற்கு குறைந்த செலவுடனும், குறைவான இடருடனும் வெளிநாட்டு வளங்களைத் திரட்டுதல்

- வெளிநாட்டு வளங்களை வினைத் திறனுடையதாகவும், பயனுறு விளைவுள்ளதாகவும் பயன்படுத்துவதற்கு வசதியளித்தல்

- நாட்டின் நீண்ட காலக் கடன்களை தாங்கிக் கொள்ளக் கூடிய தன்மையை பேணுவதற்குப் பங்களிப்புச் செலுத்துதல்.

- வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வினைத்திறனான பயன்பாட்டின் மூலம் அரச துறையின் மனித வள அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செலுத்துதல்

- திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புகளை பயனுறு விளைவுள்ளதாகவும், செயற்திறன் கொண்டதாகவும் நிறைவேற்றுவதற்கு திணைக்களத்தின் திறன்களை மேலும் வலுவூட்டுதல்

---

# எமது விழுமியங்கள்

- சகல சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் கடைப்பிடித்தல் மற்றும் சிறந்த குண நலன்களோடு இணங்கி நடப்பதன் ஊடாகவும், ஆளுமை, தெளிவாகத் தெரியும் தன்மை, வெளிப்படுத்துகை, மற்றும் ஒழுக்க நெறிகளின் அதி உயர் தரத்தைப் பேணுதல்.
- திணைக்களத்தின் அக்கறையை முன்னிறுத்தி அதி உயர் தரமான தனிப்பட்ட நேர்மையைப் பேணுதல்
- பணிக் குழுவினரின் செயலாற்றுகைகளை வெளிக்காட்டக் கூடியவாறான பரஸ்பர மதிப்பு மற்றும் நம்பிக்கைக்கான சூழலை ஏற்படுத்திப் பூரணமான சாத்தியங்களை நிறைவேற்றுதல்
- நாணயப் பொருளாளர்களுடன் உண்மையானதும், நியாயமானதுமான தொடர்புகளின் ஊடாக ஒழுக்க நெறிகளின் நீண்ட கால உறவுகளை வளர்ச்சியடையச் செய்தல்
- சகல மட்டங்களிலும் உள்ள பணியாளர்களுக்கு அதிகாரமளித்தல், தலையீடுகளைக் குறைத்தல், மற்றும் அவர்களை கடமைப் பொறுப்புள்ளவர்களாக இருக்குமாறு வேண்டுதல்

# மேனோக்கு

வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது நாட்டின் நீண்ட காலக்கடனின் நிலையான தன்மையைப் பேணி வரும் அதே வேளை, துரிதப்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கான வெளிநாட்டு வளங்களைத் திரட்டுவதோடு, வெளிநாட்டு நிதியீட்டை முகாமைத்துவம் செய்தும் வருகின்றது.. இரு தரப்பு மற்றும் பல தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு அபிவிருத்தி உதவியானது, ஆரோக்கியமானதும், நிலைபேறானதுமான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு கணிசமான மட்டத்திலான பொது முதலீடு அத்தியாவசியமாக இருப்பதனால் நாட்டின் அபிவிருத்தி நிதித் தேவைகளில் முக்கியமான பங்கை வகிப்பதோடு, உள்நாட்டு சேமிப்பு – முதலீட்டு இடைவெளிக்குப் பாலங்கட்டுவதற்கான வெளிநாட்டு நிதியினையும் வழங்குகின்றது

கடந்த பல பத்தாண்டுகளாக, உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு, ஆசிய அபிவிருத்தி வங்கி, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி (ஓஎப்ஐடீ) ஐரோப்பிய முதலீட்டு வங்கி போன்ற பல தரப்பு நிதி நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் ஜப்பான், தென் கொரியா, பிரான்ஸ், ஒஸ்ட்ரியா, ஜேர்மனி, டென்மார்க் மற்றும் ஐக்கிய அமெரிக்கா அவுஸ்திரேலியா, குவைட், சவூதி அரேபியா நெதர்லாந்து, சுவீடன், சீனா, மற்றும் இந்தியா, போன்ற இரு தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தும் சலுகை அடிப்படையிலான நிதியீட்டினைப் பெற்றுக் கொண்டுள்ளது. இச்சலுகை அடிப்படையிலான நிதியீடானது, முழுமையான நன்கொடைகள், நீண்ட கால முதிர்வுடனான கடன்கள், மற்றும் குறைந்த அல்லது வட்டியில்லாத, கலப்புக் கடன்களின் (இணைக்கப்பட்ட கடன்களும், நன்கொடைகளும்) வடிவில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வபிருத்திப் பங்காளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற சலுகை அடிப்படையிலான நிதியிடானது, வறுமைக் குறைப்பின் பரப்புக்கள், வாழ்வாதார ஆதரவு சமூக நலன் , கல்வி, சக்தியும் வலுவும், நீர் வழங்கல், வீதிகள், பாலங்கள், துறைமுகங்கள், பாலங்கள், தரைப் போக்குவரத்து விமானத் துறை போன்ற பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள், மற்றும் விவசாயம், நீர்ப்பாசனம், சுற்றாடல் பாதுகாப்பு போன்ற ஏனைய துறைகளில் உள்ள கருத்திட்டங்களின் ஊடாக செலுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அபிவிருத்தி நிதியீட்டின் சேர்க்கையும், வடிவமும், நாட்டின் தலா வருமானத்தின் படிப்படியான அதிகரிப்புடன் கடந்த சில வருடங்களாக கணிசமான அளவில் மாற்றமடைந்துள்ளது. சலுகை அடிப்படையிலான நிதியீட்டின் குறைப்புடன், கிடைக்கக் கூடிய சலுகை அடிப்படையிலான நிதியீட்டுடன் பொருத்தமான குறைவான கலப்புடனோ அல்லது சலுகை அடிப்படையிலல்லாத நிதியீட்டுடன் பொது முதலீட்டுக்கான வெளிநாட்டு நிதியீட்டுக்கான தெரிவுகளை விசாலப்படுத்துவதற்கு படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்புதிய அபிவிருத்தி உபாயத்தின் கீழ், சீனா மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளும் பிரதான அபிவிருத்திப் பங்காளர்களாக எழுச்சி பெற்றுள்ள அதே வேளை, ஆசிய அபிவிருத்தி வங்கி சர்வதேச அபிவிருத்தி அமைப்பு மற்றும் ஜப்பான் அகியன கடந்த காலத்தில் இருந்ததைப் போன்று தமது ஆதரவைத் தொடர்ந்து பேணி வந்துள்ளனர். உயர்வான தலா வருமான மட்டத்துடன், பொதுவாக மேலைத்தேய இரு தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான சலுகை அடிப்படையிலான நிதியீடு குறைந்திருக்கின்ற அதே வேளை, ஏற்றுமதிக் கடன் வடிவிலான நிதியீடு முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதே போல, சலுகை அடிப்படையிலான நிதியீட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பங்கு, படிப்படியாகக் குறைந்துள்ள அதே வேளை, சலுகை அடிப்படையிலல்லாத நிதியீட்டின் பங்கு அதிகரித்துள்ளது.

# நிறுவனக் கட்டமைப்பு

வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இயங்குவதோடு, அவருக்கு உதவியாக ஒரு மேலதிகப் பணிப்பாளர் நாயகமும், 7 பணிப்பாளர்களும் பின்வரும் பிரிவுகளுக்கு பொறுப்பாக உள்ளனர்.

- ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சீனாப் பிரிவு
- ஜப்பான், கொரியா, தாய்லாந்து, வியட்நாம், மலேசியா மற்றும் சிங்கப்பூர் பிரிவு
- உலக வங்கி, சர்வதேச நாணய நிதியப் பிரிவு
- மத்திய கிழக்கு மற்றும் தென் ஆசியப் பிரிவு
- ரஷ்யா, அவுஸ்திரேலியா, மற்றும் மேற்குப் பிரிவு
- ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிப் பிரிவு
- மூலதனச் சந்தைப் பிரிவு
- கடன் முகாமைத்துவப் பிரிவு
- கொள்கைத் திட்டமிடல் பிரிவு
- நிர்வாக மற்றும் நிதிப் பிரிவு

நிர்வாக மற்றும் நிதிப் பிரிவுகள் திணைக்களத்தின் சுமுகமானதும், வினைத் திறனானதுமான தொழிற்பாட்டுக்குத் தேவையான ஆதரவுச் சேவைகளை வழங்குகின்றன. இவ்வாதரவுச் சேவைகள் பிரதானமாக பௌதீக மற்றும் மனித வளங்களின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தியோடு இணைந்தனவாகும். திணைக்களத்தின் பௌதீக வளங்கள் அளவைச் சபையின் செயன்முறையின் ஊடாக வருடாந்தம் உறுதிப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டில் வெற்றிடமாக இருந்த 32 சதவீதமான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 30 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலைமையானது 2014 ஆம் ஆண்டின் வருடாந்த வேலைத்திட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைவதில் திணைக்களத்துக்குச் சவாலாக உள்ளது. அவ்வாறான வெற்றிடங்கள் இருந்தாலும், திணைக்களம் 2014 ஆம் ஆண்டில் சிறந்த முறையில் செயலாற்றியது.

## உத்தியோகத்தர்களின் அபிவிருத்தி மற்றும் பயிற்சி

2014 ஆம் ஆண்டில், இத்திணைக்களமானது உத்தியோகத்தர்களின் இயலளவு அபிவிருத்தி மற்றும் அவர்களின் செயற்திறனை விருத்தி செய்வதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதன் ஊடாக மனித வள அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்கை வகித்துள்ளது. இத்திணைக்களத்தின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் பின்வருமாறு:

**பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள்**

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிறிய ராஜ்ஜியங்களுக்கான நவீன ராஜ தந்திரம்- மோல்ட்டா | 1 |
| தென்னாசிய நாடுகளிலிருந்தான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி தொடர்பான மாநாடு - சீனா | 2 |
| படுகடன் அபிவிருத்தி தொடர்பான செயலாற்ற மதிப்பீட்டுப் பயிற்சி - சீனா | 1 |
| 4 ஆம் ஆசிய பிராந்திய பொதுப் படுகடன் முகாமைத்துவப் பேரவை - ஜோர்ஜியா | 1 |
| பொருளாதார மீள் கட்டமைப்பும், ஆசிய நாடுகளுக்கான சரிப்படுத்தல்களும்- சீனா | 2 |

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| நடுத்தர வருமான நிலைமைக்கான பயணம் – அரச துறை முகாமையாளர்களுக்கான சவால்கள் - சீனா | 1 |
| தென்னாசிய நாடுகளுக்கான உட்கட்டமைப்புத் திட்டமிடலும், நிர்மாணமும் தொடர்பான மாநாடு - சீனா | 2 |
| ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான வெளிநாட்டு நிபுணத்துவத்தினை அறிமுகப்படுத்தலும், சமூக – பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்தலும் தொடர்பான மாநாடு - சீனா | 1 |

திணைக்களத்தின் நிர்வாக மற்றும் உதவி அலுவலர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான தேவையை இனங்கண்டு, 2014 ஆம் ஆண்டில் முகாமைத்துவ உதவிச் சேவை மற்றும் ஆதரவான சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிடத்தக்க அளவிலான உள்ளூர் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை அவர்கள் பயிற்றுவிக்கப்பட்ட துறைகள் தொடர்பான விபரங்களைச் சுருக்கமாகக் காட்டுகின்றது.

**உதவி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளூர் பயிற்சி வாய்ப்புகள்**

| பயிற்சி வழங்கப்பட்ட பாடம் | பயிற்சி அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| போக்குவரத்து முகாமைத்துவம் | 1 |
| அடிப்படைப் பெறுகைச் செயன்முறை | 1 |
| அலுவலக முகாமைத்துவமும், மனப்பான்மை அபிவிருத்தியும் | 2 |
| சம்பள மாற்றங்கள் | 1 |
| கணணித்துவமும் உள்நாட்டு ஓய்வூதியக் கொடுப்பனவும் | 3 |
| ஆங்கில மொழியில் சான்றிதழ் நெறி | 1 |
| ஒழுக்காற்றுச் செயன்முறைகள் | 1 |
| அடிப்படைத் தமிழ் மொழி | 2 |
| நிதி ஒழுங்கு முறை விதி இலக்கம் 104 விசாரணைகள் | 1 |

# வெளிநாட்டு நிதியீடு


வெளிநாட்டு நிதியீடானது நாட்டின் நிலையான அபிவிருத்தியை நோக்கி குறிப்பிடத்தக்க பங்களிப்பினை மேற்கொள்ளும் அதே வேளை, கணிசமான மட்டத்திலான பொது முதலீட்டினையும் பேணிவருவதோடு, தற்போது 50 சதவீதமான பொது முதலீட்டுச் செலவு வெளிநாட்டு நிதியீட்டின் ஊடாக நிதிப்படுத்தப்படுகின்றது. ஒரு பாதுகாப்பான இடர் அளவுடன் இணைக்கப்பட்ட குறைவான சாத்தியமான செலவில் வெளிநாட்டு நிதியினைத் திரட்டுவதன் மூலம் அரசாங்க நிதித் தேவைகளை உறுதிப்படுத்தலானது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடாக உள்ளதோடு, இரு தரப்பு, மற்றும் பல தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களுடன் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் தலையிடுவதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்புக்கள், 2014 ஆம் ஆண்டிற்கான பயன்பாட்டு விகிதங்கள், படுகடன் கொடுப்பனவு ஆகியனவற்றை இவ்வத்தியாயம் விவரிக்கின்றது.

## வெளிநாட்டு நிதியீட்டின் அர்ப்பணிப்புக்கள்

2014 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு அபிவிருத்திப் பங்கேற்பாளர்களுடனும், கடன் வழங்கும் நிறுவனங்களுடனும் 51 நிதி உடன்படிக்கைகளுக்குக் கைச்சாத்திட்டுள்ளது. இவ்வுடன்படிக்கைகள், ஐ.அ.டொ 1500 மில்லியன் பெறுமதியான இரண்டு நாணய முறிகளின் வழங்கல்கள் உள்ளடங்கலாக ஐ.அ.டொ 5,777.8 மில்லியனுடன் தொடர்புடைய 34 கடன் உடன்படிக்கைகளையும், ஐ.அ.டொ 76.5 மில்லியனுடன் தொடர்புடைய 17 நன்கொடை உடன்படிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளது.


2014 ஆம் ஆண்டில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்/நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்களில் பிரதான நிதிப் பங்கு (52 சதவீதம்) சீனாவின் மூலமும், அதனைத் தொடர்ந்து உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் ஜப்பான் ஆகியனவற்றின் மூலம் அர்ப்பணிக்கப்பட்டிருந்ததோடு அவை முறையே 13 சதவீதம், 12 சதவீதம், மற்றும் 11 சதவீதத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்தின.

**2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் நன்கொடையாளர் வாரியான அர்ப்பணிப்புக்கள்**




2014 ஆம் ஆண்டில், (நாணய முறிகளை வழங்குவதன் ஊடாகத் திரட்டப்பட்ட நிதி தவிர்ந்த) அபிவிருத்திக் கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட வெளிநாட்டு நிதியீட்டத்தில் பெரும்பாலும் 65 சதவீதம் வீதிகள் மற்றும் பாலங்களின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டிருந்த அதே வேளை, நீர் வழங்கலும், துப்புரவாக்கலும், அனர்த்த முகாமைத்துவம், தொழில்சார் பயிற்சித் துறைகள் ஆகினவற்றிற்கும் குறிப்பிடத்தக்க அளவிலான நிதி அர்ப்பணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டில் துறை வாரியான அர்ப்பணிப்புக்கள்




# வெளிநாட்டு நிதியீட்டின் பகிர்வுகள்

2014 ஆம் ஆண்டில், அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்குச் செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தப் பகிர்வுகள் ஐ.அ.டொ 1,395.29 மில்லியன்களாகும். அத்தொகையில், ஐ.அ.டொ 1,315 மில்லியன் தொகைக்குரிய 94 சதவீத நிதி கடன்களின் ஊடாகப் பகிரப்பட்டிருந்ததோடு, ஐ.அ.டொ 80.76 மில்லியன் தொகையான மீதித் தொகை நன்கொடைகளின் ஊடாகப் பகிரப்பட்டிருந்தது.

2014 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட மொத்தப் பகிர்வில், பாரிய அளவிலான வெளிநாட்டு நிதியீட்டப் பகிர்வு அதாவது ஐ.அ.டொ 308.92 மில்லியன் தொகை, சீன அரசாங்கத்தின் நிதி உதவியின் ஊடாக நடைமுறைபபடுத்தப்படும் கருத்திட்டங்களிலிருந்து அறிக்கையிடப்பட்டிருந்ததோடு, அதனைத் தொடர்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பான் ஆகியனவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களிலிருந்து முறையே சுமார் ஐ.அ.டொ 247 மில்லியன்களும், மற்றும் ஐ.அ.டொ 240 மில்லியன்களும் அறிக்கையிடப்பட்டிருந்தன.

**2014 ஆம் ஆண்டில் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அபிவிருத்திப் பங்காளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பகிர்வுகள் (மில்லியன்)**

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் நிறுவனங்கள் | கடன் | | நன்கொடை | | மொத்தத் தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ஐஅடொ | ரூபா. | ஐஅடொ | ரூபா. | ஐஅடொ |
| **இரு தரப்பு** | **110,387.19** | **845.80** | **7,355.84** | **56.41** | **117,743.03** | **902.21** |
| சீனா | 40,315.24 | 308.92 | | | 40,315.24 | 308.92 |
| ஜப்பான் | 31,308.09 | 239.89 | 2,179.01 | 16.68 | 33,487.10 | 256.57 |
| இந்தியா | 15,076.92 | 115.50 | 3,564.71 | 27.35 | 18,641.63 | 142.85 |
| ஐக்கிய இராச்சியம் | 7,268.92 | 55.69 | | | 7,268.92 | 55.69 |
| *நெதர்லாந்து* | 5,168.49 | 39.57 | | | 5,168.49 | 39.57 |
| தென் கொரியா | 2,644.74 | 20.27 | | | 2,644.74 | 20.27 |
| ஹங்கேரி | 659.18 | 5.05 | | | 659.18 | 5.05 |
| சுவீடன் | 467.22 | 3.58 | | | 467.22 | 3.58 |


| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் நிறுவனங்கள் | கடன் | | நன்கொடை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ஐஅடொ | ரூபா. | ஐஅடொ | ரூபா. | ஐஅடொ |
| ஸ்பெய்ன் | 1,003.72 | 7.69 | | | 1,003.72 | 7.69 |
| பிரான்ஸ் | 1,374.92 | 10.54 | | | 1,374.92 | 10.54 |
| ஒஸ்ட்ரியா | 894.08 | 6.85 | | | 894.08 | 6.85 |
| பெல்ஜியம் | 453.29 | 3.48 | | | 453.29 | 3.48 |
| டென்மார்க் | 285.53 | 2.19 | | | 285.53 | 2.19 |
| ஜேர்மன் | 194.66 | 1.49 | 148.01 | 1.14 | 342.67 | 2.63 |
| குவைட் | 193.76 | 1.48 | | | 193.76 | 1.48 |
| சவூதி நிதி | 1,415.21 | 10.84 | | | 1,415.21 | 10.84 |
| ஐக்கிய அமெரிக்கா | 1,463.31 | 11.23 | 1,331.48 | 10.22 | 2,794.79 | 21.45 |
| அவுஸ்திரேலியா | 199.91 | 1.54 | | | 199.91 | 1.54 |
| பாகிஸ்தான் | | | 132.63 | 1.02 | 132.63 | 1.02 |
| **பல தரப்பு** | **61,155.52** | **468.73** | **3,177.56** | **24.35** | **64,333.08** | **493.08** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 32,225.24 | 247.07 | 934.64 | 7.16 | 33,159.88 | 254.23 |
| உலக வங்கி - சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பு- | 21,084.19 | 161.5 | 2,011.39 | 15.42 | 23,095.58 | 176.92 |
| உலக வங்கி - புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி | 2,434.92 | 18.67 | | | 2,434.92 | 18.67 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி | 683.58 | 5.24 | 65.16 | 0.50 | 748.74 | 5.74 |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி (OFID) | 1,973.90 | 15.14 | | | 1,973.90 | 15.14 |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கி | 2,753.69 | 21.11 | | | 2,753.69 | 21.11 |
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | | | 18.40 | 0.14 | 18.40 | 0.14 |
| ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் (யுஎன்எச்சீஆர்) | | | 2.60 | 0.02 | 2.60 | 0.02 |
| ஐக்கிய நாடுகள் சனத்தொகை அமைப்பு (யுஎன்எக்பீஏ) | | | 17.04 | 0.13 | 17.04 | 0.13 |
| உணவு மற்றும் விவசாய நிறுவனம் | | | 128.33 | 0.98 | 128.33 | 0.98 |
| **மொத்தம்** | **171,542.71** | **1,314.53** | **10,533.40** | **80.76** | **182,076.11** | **1,395.29** |

**குறிப்பு:** *1.* ஒவ்வொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்ட திகதியில் வேறுபட்ட நாணயங்களுக்குக் காணப்பட்ட செலாவணி விகிதங்கள் பரிமாற்ற விகிதங்களாக அறிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

*2. அரசுடமை தொழில் முயற்சிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் உள்ளக்கப்படவில்லை.*

2014 ஆம் ஆண்டில் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான மொத்த வெளிநாட்டுப் பகிர்வில் சுமார் 50 சதவீதம் வீதிகள், பாலங்கள், மற்றும் போக்குவரத்துத் துறைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**2014 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதிப் பகிர்வில் துறை வாரியான விநியோகம்**





## அரசாங்க வெளிநாட்டுப் படுகடன் இருப்பு

2014 ஆம் ஆண்டின் இறுதியில், வெளிநாட்டுப் படுகடன் இருப்பு ஐ.அ.டொ 20.2 பில்லியன்[1] தொகையைக் காட்டியது. அத்தொகையில், 42 சதவீதம் இரு தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றதோடு, அதில் 30 சதவீதம் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின் கீழ் இரு தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற கடன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு, மீதி 12 சதவீதமும் இரு தரப்பு ஏற்றுமதிக் கடன்களைப் பிரதிநதித்துவப்படுத்தியது. கடன்களிலிருந்து உள்ளடக்கப்பட்ட மொத்தக் கடன் இருப்பில் சுமார் 33 சதவீதம் பல தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தும் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்தும் வழங்கப்பட்ட அதே வேளை, மூலதனச் சந்தைகளிலிருந்து நிதி வளங்களைத் தட்டிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதனால், சர்வதேச அரச முறிகளின் வழங்கல்களின் ஊடாக திரட்டப்பட்ட நிதியினை உள்ளடக்கியிருந்தது.

[1] அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நிதிப்படுத்துவதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் மற்றும் சர்வதேச நாணய முறிகளை வழங்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியில் மீளச் செலுத்த வேண்டியுள்ள கடன் நிதி இதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அரசுடமை தொழில் முயற்சிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளுக்கு மீளச் செலுத்த வேண்டிய கடன் நிதி இதற்குள் உள்ளடக்கப்படவில்லை.


**அரசாங்கத்தின் தற்போதுள்ள வெளிநாட்டுப் படுகடன் சேர்க்கை**




## படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

சுதந்திரத்துக்குப் பின்னரான கடந்த 6 பத்தாண்டு காலப்பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் திரட்டப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் படிப்படியான அதிகரிப்புடன் படுகடன் தீர்ப்பனவானது நாட்டின் நாணய மற்றும் அரசிறை முகாமைத்துவத்தில் முக்கியமான ஒரு பகுதியாக மாறியது.. வெளிநாட்டு அதிர்ச்சிகள் மற்றும் உள்நாட்டுத் தடைகளினால் ஏற்பட்ட பின்னடைவுகளுடன் கூட, இலங்கை சகல படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் தீர்ப்பனவு செய்வதன் மூலம் புறக்கணிப்புக்களற்ற ஒரு நிலைமையைப் பேணி வந்துள்ளது.

**2007–2014 வரையிலான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும், 2018 வரையிலான எதிர்வு கூறல்களும் (ஐஅடொ மில்லியன்)**




2005 தொடக்கம் 2014 வரையிலான காலப்பிரிவுகளில் அரசாங்கம் சுமார் 9,246 மில்லியன்[2] படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளைச் செலுத்தியுள்ளது. அத்தொகையில் ஐ.அ.டொ 6,424 மில்லியன் மூலதன மீள் கொடுப்பனவுத் தொகையும், ஐ.அ.டொ 2,822 மில்லியன் தொகையான வட்டிக் கொடுப்பனவுகளும் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களுக்கும் நாணய முறிகளின் வழங்கல்களுக்கும் மேற்கொள்ளப்பட்டது. அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கும் சர்வதேச முறிகளை வழங்குவதற்கும் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களுக்காக 2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொ 1,259 மில்லியன் தொகையாக இருந்ததோடு, அதில் முதல் கொடுப்பனவுகள் ஐ.அ.டொ 788 மில்லியன் தொகையாகவும், வட்டிக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொ 471 மில்லியன் தொகையாகவும் இருந்தது.

[2] வெளிநாட்டுத் தரப்பினர் மற்றும் . முறிகள் போன்றன தொடர்பான மூலதனமும், வட்டிக் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்படவில்லை

# பிரிவுகள் வாரியான செயலாற்றுகை

# ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சீனாப் பிரிவு

## ஆசிய அபிவிருத்தி வங்கி

### இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்களுள் ஒருவராக ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆசிய அபிவிருத்தி வங்கியானது பல் நோக்கு அபிவிருத்திப் பங்காளர்களுள் மிகப் பிரதான பங்காளராக விளங்குவதோடு, அவ்வங்கி 48 வருடங்களுக்கு மேலாக இலங்கையுடன் வினைத்திறனான உறவு முறையினைப் பேணி வந்துள்ளது. 1966 ஆம் ஆண்டில் இவ்வங்கி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, இவ்வங்கியானது, திரண்ட கடன் பெறுகையாக ஐ.அ.டொ 6.18 மில்லியன்களுடன் மொத்தம் 171 கடன்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கி கருத்திட்டங்களுக்கு ஐ.அ.டொ 358 மில்லியன் நன்கொடை உதவியை (ஆசிய அபிவிருத்தி வங்கியின் துணை நிதி நன்கொடைகள் உட்பட) வழங்கியுள்ளதோடு. 261 தொழில்நுட்ப உதவி நன்கொடைகளின் ஊடாக ஐ.அ.டொ 124 மில்லியன்களை வழங்கியுள்ளது. தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான வருடாந்தக் கடன் பெறுகை சுமார் ஐ.அ.டொ 300 மில்லியன்களாகவோ அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.4–0.6 சதவீதமாகவோ உள்ளது.


### 2015-2017 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கான நாட்டின் பங்கேற்பு உபாயம்

2015-2017 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கான இடைக்கால நாட்டின் பங்கேற்பு உபாயமானது இலங்கை அரசாங்கத்தினதும், ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் பங்கேற்புடன் 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. அது பிரதானமாக (i) பூரண மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி (ii) தனியார் முதலீட்டினை ஊக்குவித்தலும், பொது முதலீட்டின் வினைத்திறனை அதிகரித்தலும் (iii) மனித வள மற்றும் அறிவு அபிவிருத்தி ஆகிய துறைகளின் மீது கவனம் செலுத்துகின்றது. அதற்கு ஏற்ப, இது நாட்டின் மாற்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, திறன் அபிவிருத்தி, போக்குவரத்து சேவைகளின் உகப்பாக்கம், நிலையான சக்தி, போன்ற துரிதப்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட அவ்வாறான சேவைகளுக்கான உயர்ந்த அளவிலான கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கு இத்துறைகளின் அபிவிருத்தி மிக இன்றியமையாததாக இருந்தமையேயாகும். இதன் பிரகாரம், இலங்கை சலுகை அடிப்படையிலும், மற்றும் சலுகை அற்ற இறுக்கமான வட்டி வீதங்களின் கீழும் வருடாந்தம் சுமார் ஐ.அ.டொ 1,123 மில்லியன்களைப் பெற்றுக் கொள்ளும். 2015-2017 ஆண்டு காலப்பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதில் கணிசமான அளவிலான தொகை வீதிகள், போக்குவரத்து, நீர் வளங்கள் முகாமைத்துவம், சக்தியும் வலுவும் நீர் வழங்கல் துப்புரவாக்கல், கழிவு நீர் முகாமைத்துவத் துறை மற்றும் திறன்கள் அபிவிருத்தித் துறைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

### 2014 இல் அர்ப்பணிப்புக்களும் பகிர்வுகளும்

2014 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்பு ஐ.அ.டொ 513 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இவ்வர்ப்பணிப்புக்கள் மின்சக்தி மற்றும் வலுத் துறைக்கான ஐ.அ.டொ 150 மில்லியன், நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் துறைக்கான ஐ.அ.டொ 88 மில்லியன், திறன்கள் மற்றும் கல்வித் துறைக்கான ஐ.அ.டொ 100 மில்லியன் மற்றும் வீதிகளும், போக்குவரத்துத் துறைக்கான ஐ.அ.டொ 175 மில்லியன்களையும் உள்ளடக்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தற்போதைய கடன் தொகுதி 33 கடன்களையும், 5 நன்கொடைகளையும் உள்ளடக்கியுள்ளது. இக்கடன்களின் கீழ் 2014 இல் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பகிர்வு ஐ.அ.டொ 338 மில்லியன்களாகும்.


2014 இன் பகிர்வின் துறை வாரியான விநியோகம்




## 2014 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகுதி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகுதியானது, பாரிய துறையான வீதியும் போக்குவரத்துத் துறையிலும், அதனைத் தொடர்ந்து சக்தியும் வலுவும், நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல், கல்வி மற்றும் திறன்கள் அபிவிருத்தித் துறைகளிலும் மற்றும் பிராந்திய அபிவிருத்தி, நிதி மற்றும் அரசிறை முகாமைத்துவம் உள்ளார்ந்த 6 துறைகளிலும் பரந்துள்ளது. 2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஆசிய அபிவிருத்தியின் துறை வாரியான கடன் தொகுதியை பின்வரும் வரைபடம் விளக்குகின்றது.

ஆசிய அபிவிருத்தியின் கடன்களின் துறை வாரியான விநியோகம் (ஐ.அ.டொ மில்லியன்)



# 2014 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பிரதான கருத்திட்டங்கள்

| கருத்திட்டத்தின் பெயர் | தொகை ஐ.அ.டொ. மில்லியன் |
|---|---|
| **கடன்கள்** | |
| வீதிக் கருத்திட்ட தயாரிப்பு வசதியளிப்புத் தொழில்நுட்ப உதவி | 15.0 |
| வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் | 154.0 |
| தேசிய நெடுஞ்சாலைகள் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் - 1ஆம் மேலதிக நிதியீடு | 85.0 |
| வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் – மேலதிக நிதியீடு | 98.0 |
| தெற்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் | 75.0 |
| இரண்டாந்தர நகரங்களின் கிராமிய சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் – மேலதிக நிதியீடு | 17.6 |
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் | 88.0 |
| உலர் வலய நகர நீர் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் | 60.0 |
| யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் | 90.0 |
| உலர் வலய நகர நீர் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் – ; மேலதிக நிதியீடு | 40.0 |
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கருத்திட்டம் 1 | 84.0 |
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கருத்திட்டம் 2 | 88.0 |
| தூய சக்தியும், அடைவு விருத்திக் கருத்திட்டம் | 160.0 |
| நிலையான சக்தித் துறை ஆதரவுக் கருத்திட்டம் | 120.0 |
| தூய சக்தியும் வலையமைப்பு வினைத்திறன் விருத்திக் கருத்திட்டம் | 130.0 |
| அரசிறை முகாமைத்துவ வினைத் திறன் கருத்திட்டம் | 30.8 |
| உள்ளூராட்சி மன்ற விரிவாக்கல் துறைக் கருத்திட்டம் | 55.0 |
| திறன்கள் துறை விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம் | 100.0 |
| கல்வித் துறை அபிவிருத்திக் நிகழ்ச்சித் திட்டம் | 200.0 |
| **நன்கொடைகள்** | |
| உலர் வலய நகர நீர் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் | 25.0 |
| யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மோதலுக்குப் பின்னரான பிரதேசங்களின் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமிய விருத்திக் நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் | 2.0 |
| அறிவு சார் சமூகத்திற்கான கல்விக் கருத்திட்டம் | 15.0 |
| தூய சக்தியும், அடைவு விருத்திக் கருத்திட்டம் | 4.2 |
| தூய சக்தியும் வலையமைப்பு வினைத்திறன் விருத்திக் கருத்திட்டம் | 1.5 |
| **மொத்தம்** | **1,738.1** |

## 2014 இல் அங்கீகாரம் வழங்கப்பட்ட கடன்களும், அமுலாக்கப்பட்ட கடன்களும்

2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் மொத்தப் பெறுமதி ஐ.அ.டொ 457 மில்லியன்களைக் கொண்ட 3 கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, ஐ.அ.டொ 263 மில்லியன் பெறுமதியான 3 கருத்திட்டங்கள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டன. அங்கீகாரம் வழங்கப்பட்டவைகளில் 45 சதவீதமானவை வீதிகள் மற்றும் போக்குவரத்துத் துறைகளைச் சார்ந்தனவாகவும், 33 சதவீதமானவை சக்தியும் வலுவும் துறைகளைச் சார்ந்தனவாகவும், 22 சதவீதமானவைகள் திறன்கள் மற்றும் கல்வித் துறையைச் சார்ந்தவையாகவும், இருந்தன.

**2014 இல் அங்கீகாரம் வழங்கப்பட்ட கடன்களும், அமுலாக்கப்பட்ட கடன்களும்**

| கடன் | தொகை ஐ அ டொ மில்லியன் |
|---|---|
| **அங்கீகாரம் வழங்கப்பட்டவைகள்** | |
| பச்சை சக்தி அபிவிருத்தியும் சக்தி வினைத்திறன் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1 | 150 |
| திறன்கள் துறை விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம் - பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கல | 100 |
| ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1 | 100 |
| ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 | 107 |
| மொத்தம் | **457** |
| **அமுலுக்குக் கொண்டு வரப்பட்டவைகள** | |
| திறன்கள் துறை விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம் - பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கல் | 100 |
| தெற்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் | 75 |
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 | 88 |
| மொத்தம் | **263** |

## 2015 இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிரதான கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ விருத்திக் கருத்திட்டம்– கட்டம் 3 | 128 |
| மகாவலி நீர்ப்பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் | 150 |
| ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 | 107 |
| போக்குவரத்துக் கருத்திட்டத் தயாரிப்பு வசதியளிப்பு | 15 |

## 2014 இல் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வழங்கிய பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | பெறுபேறுகள் |
|---|---|
| அறிவு சார் சமூகத்திற்கான கல்விக் கருத்திட்டம் | விசேடமாக கிராமிய மற்றும் பின் தங்கிய இடங்களில் விருத்தியுற்ற தரம், தொடர்புத் தன்மை, வினைத்திறன், இரண்டாந்தர மற்றும் மூன்றாந்தர கல்விக்கான அடைவுக்கான சம உரிமை |
| கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண வீதிக் கருத்திட்டம் | (i) கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் விருத்தியுற்ற வீதி வலையமைப்பு<br>(ii) மாகாண மட்டத்தில் விருத்தியுற்ற நிறுவன ரீதியான இயலளவு |
| இரண்டாந்தர நகரங்களின் கிராமிய சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் – மேலதிக நிதியீடு | 946,000 மக்களுக்கு குழாய் வழியான பாதுகாப்பான நீரையும், கருத்திட்டப் பிரதேசங்களில் 171,500 மக்களுக்கு பாதுகாப்பான துப்புரவாக்கலையும் வழங்கல் |
| மோதலினால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசரக் கருத்திட்டம் | மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீட்கப்பட்ட வாழ்வாதாரம், பொருளாதார உட்கட்டமைப்பு, நிர்வாக மற்றும் சட்ட சேவைகள் |

## 2014 இல் இடம் பெற்ற விசேட நிகழ்வுகள்

- 2014 மே – கதகஸ்தான் அஸ்தானாவில் 47 ஆவது வருடாந்தக் கூட்டம் இடம் பெற்றது.
- **<u>கடன் கைச்சாத்திடல் :</u>**
    - மே – திறன்கள் தறை விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம் - பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கல் (ஐஅடொ 100 மில்லியன்)
    - மே – தெற்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் (ஐஅடொ 75 மில்லியன்)
    - ஜுன் – பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் – கட்டம் 2 (ஐ.அ.டொ 88 மில்லியன்)
    - நவம்பர் – ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1- (ஐ.அ.டொ 100 மில்லியன்)
    - நவம்பா – பச்சை சக்தி அபிவிருத்தியும், சக்தி வினைத்திறன் விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (ஐ.அ.டொ 150 மில்லியன்)
- **<u>உயர் மட்ட ஆலோசனை தூதுவர் குழுக்கள்:</u>**
    - ஜனவரி - ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசியத் திணைக்களத்தின் துணைத் தலைவர் திரு வென்காய் சேங் (செயற்பாடு 1) பணிப்பாளர் நாயகம், திரு. ஜுவான் மிராண்டா ஆகியோர் **உயர் மட்ட ஆலோசனைத் தூதுவர் குழு சார்பில்** இலங்கைக்கு விஜயம் செய்தனர்.
    - மார்ச் – ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. யில கிவோன் யூன் உயர் மட்ட ஆலோசனைத் தூதுவர் குழு சார்பில் இலங்கைக்கு விஜயம் செய்தார்.
    - மே – ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் நாயகம், திரு. ஜுவான் மிராண்டா பிரதிப் பணிப்பாளர் நாயகம் திரு. ஹுங் கிம் ஆகியோர் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி வழங்கப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பான இணைக்கப்பட்ட மீளாய்வு ஒன்றை நடாத்துவதற்கு இலங்கைக்க வருகை தந்தனர்.

- ஜுன் - ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் திரு. தகேஹிகோ நகாலூ , இலங்கைகக்கு தனது முதல் விஜயத்தினை மேற்கொண்டார். அவருடன் பணிப்பாளர் நாயகம் திரு. ஜுவான் மிராண்டா அவர்களும் வருகை தந்தார்.

- ஆகஸ்ட் - திரு. புரூஸ் எல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் துணைத் தலைவர் நிர்வாக மற்றும் கூட்டுறவு முகாமைத்துவம் சுற்றாடல் தொடர்பான சார்க் பிரதா நீதவான்களின் வட்ட மேசை மாநாட்டுக்கு அழைப்பின் பேரில் வருகை தந்தார்.

- நவம்பர் - திரு. பிந்து என். லோஹானி துணைத் தவைலர் அறிவு முகாமைத்துவமும், நிலையான அபிவிருத்தியும் உயர் மட்ட ஆலோசனைத் தூதுவர் குழு சார்பில் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவர் ஆசிய பசுபிக் வர்த்தகப் பேரவைக்கும் விஜயம் செய்தார்.

- நவம்பர் -திரு வென்காய் சாங் துணைத் தலைவர் (செயற்பாடு 1), ஆசிய அபிவிருத்தி வங்கி நெடுஞ்சாலைகள் செயலகக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டார்.

2014 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட உயர் மட்ட தூதுவர் குழுக்கள் உள்ளடங்கலாக 102 ஆசிய அபிவிருத்தி வங்கியின் தூதுவர் குழுக்கள் வருகை தந்தன.


# சீனா

இலங்கை அரசாங்கம் சீனாவிடமிருந்து நன்கொடை மற்றும் கடன் ஆகிய வடிவங்களில் நிதி உதவியினைப் பெற்றுக் கொள்கின்றது. சீன அரசாங்கத்தினால் நன்கொடைகளும், வட்டியில்லாக் கடன்களும் வழங்கப்படும் அதே வேளை, கடன்களைச் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி, சீன அபிவிருத்தி வங்கி, மற்றும் சீனக் கைத்தொழில் வர்த்தக வங்கி ஆகியன வழங்குகின்றன.

2010–2014 ஆம் ஆண்டு வரையிலான கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் சீனாவினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்கள் ஐ.அ.டொ 5,806 மில்லியன்களாகும். கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்களில் உயர் நிலையிலான அர்ப்பணிப்புக்கள் அதாவது ஐ.அ.டொ 2,612 மில்லியன்கள் 2014 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, அதனைத் தொடர்ந்து முறையே 2012 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ 1,056 மில்லியன்களையும், மற்றும் 2010 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ 829 மில்லியன்களையும் அறிக்கையிட்டது. 2014 இல் சீன எக்சிம் வங்கி வெளிவட்ட அதிவேகப்பாதைக் கருத்திட்டம் கட்டம் III இன் நிர்மாணம், தெற்கு அதி வேகப் பாதைக் கருத்திட்டத்தின் நீடிப்பு (பகுதி 1,4) மற்றும் அம்பாந்தோட்டை கேந்திர அபிவிருத்திக் கருத்திட்டம் ஆகியனவற்றின் நிர்மாணத்திற்காக சீன எக்சிம் வங்கி அர்ப்பணித்துள்ள அதே வேளை, சீன அபிவிருத்தி வங்கி முன்னுரிமை வீதிக் கருத்திட்டம் III இற்கு (கட்டம் 1,2) அர்ப்பணித்துள்ளது. (கட்டம் I & II) கருத்திட்டம்.

கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் சீனாவினால் நிதி உதவி வழங்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களிலிருந்து அறிக்கையிடப்பட்ட மொத்தப் பகிர்வுகள் ஐ.அ.டொ 3,745 மில்லியன்களாகும். அத்தொகையில் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பகிர்வு ஐ.அ.டொ 533.5 மில்லியன்களாகும்[3]. அத்தொகையில் உயர் நிலையிலான பகிர்வான ஐ.அ.டொ 147 மில்லியன் அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்துக்குப் பகிரப்பட்டிருந்தது. முன்னுரிமை வீதி விருத்திக் கருத்திட்டம் மற்றும் புத்தளம் அனல் மின் நிலையக் கருத்திட்டம் கட்டம் II, ' முறையே ஐ.அ.டொ 13.5 மில்லியன்களையும், ஐ.அ.டொ 51 மில்லியன்களையும் அறிக்கையிட்டன.

2010 - 2014 வரையிலான அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும் (ஐஅடொ மில்லியன்)





3 அரசுடமை தொழில்முயற்வசிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பகிர்வுகள் உள்ளடக்கப்படவில்லை.

# துறை வாரியான விநியோகம்

கடந்த ஐந்து வருட காலப்பிரிவில், சீன உதவியானது பிரதானமாக வீதிகளும் பாலங்களும், சக்தியும் வலுவும், துறைமுகங்கள், துறைமுகமும் கப்பற் போக்குவரத்துத் துறை மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளின் அபிவிருத்திக்கே பெற்றுக் கொள்ளப்பட்டது. அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட சீனாவின் நிதி உதவியில் பகிரப்படாத மீதி தற்போது ஐ.அ.டொ 8,325 மில்லியன்களாக உள்ளது. இத்தொகையில் உயர்ந்த அளவிலான தொகை, வீதிகள் மற்றும் பாலங்கள் துறைகளின் அபிவிருத்திக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. அது மொத்தத் தொகையில் ஐ.அ.டொ 5,749 மில்லியன்கள் அல்லது 69 சதவீதமாக இருந்தது. இரண்டாவது உயர்வான தொகை, துறைமுகமும் கப்பற் போக்குவரத்துத் துறை அபிவிருத்தியின் கீழ் பயன்படுத்தப்பட்டது. இது மொத்தத் தொகையில் 15 சதவீதமாக இருந்தது. புகையிரதத்துறை சுமார் 7 சதவீதமாக இருந்தது.

**பகிரப்படாத மீதியின் துறை வாரியான பகிர்வு**




2014 இல் பின்வரும் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

- வெளிவட்ட அதிவேகப்பாதை நிர்மாணக் கருத்திட்டம் கட்டம் III
- தெற்கு அதிவேகப் பாதையின் நீடிப்பு, பிரிவு 1, மாத்தறையிலிருந்து பெலியத்தை வரை
- தெற்கு அதிவேகப் பாதையின் நீடிப்பு, பிரிவு 4, மத்தளையிலிருந்து அம்பாந்தோட்டை வழியாக அந்தாரவெவ கருத்திட்டம்
- அம்பாந்தோட்டை கேந்திர அபிவிருத்திக் கருத்திட்டம்
- முன்னுரிமை வீதிக் கருத்திட்டம் III (கட்டம் I) கருத்திட்டம்
- முன்னுரிமை வீதிக் கருத்திட்டம் III (கட்டம் II) கருத்திட்டம்

# ஜப்பான், கொரியா, தாய்லாந்து, வியட்நாம், மலேசியா மற்றும் சிங்கப்பூர் பிரிவு


# ஜப்பான்

அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையின் பிரதான பங்கேற்பாளர்களில் ஒருவராக விளங்கும் ஜப்பானிய அரசாங்கம் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தித் தேவைகளுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் தனது உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவையை கடன் உதவி (யென் கடன்கள்), நன்கொடை உதவி , தொழில்நுட்ப உதவி, மற்றும் அபிவிருத்தி ஆய்வுகள் போன்றன வடிவில் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக வழங்கி வருகின்றது. 2014 டிசம்பர் மாதமளவில், ஜப்பானின் தற்போதைய மொத்த முதலீட்டுத் தொகுதியானது, ஐ.அ.டொ 2,443.1 மில்லியன்களை உள்ளடக்கியுள்ளதோடு, அவை 21 கடன் கருத்திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்ட ஐ.அ.டொ 2,341.5 மில்லியன்களையும், மற்றும் 11 நன்கொடைக் கருத்திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்ட ஐ.அ.டொ 101.6 மில்லியன்களையும் உள்ளடக்கியுள்ளது.

ஜப்பானிய முதலீட்டுக் கடன் தொகுதியானது, அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு அமைவாக உள்ள அதே வேளை, முன்னுரிமைத் துறைகளான சக்தியும், வலுவும், நீர் வழங்கல், துறைமுகங்களும், விமானத் துறையும், சுகாதாரப் பராமரிப்பு, விவசாயம், நீர்ப்பாசனம், அனர்த்த முகாமைத்துவம், சிறிய மற்றும் நடுத்த தொழில் முயற்சிகளுக்கு இடையில் ஒப்பீட்டு ரீதியில் சமனிலையையும் பேணி வருகின்றது.

## 2014 இல் ஜப்பானிய அபிவிருத்தி ஒருங்கிணைப்பு


2011 இல் ஐ.அ.டொ 523 மில்லியன் பாரிய இரு தரப்பு ஒருங்கிணைப்பினை அறிக்கையிடுவதன் மூலம் ஜப்பானிய வருடாந்த யென் கடன் பொதியை ஐ.அ.டொ 350 – 400 மில்லியன்களிலிருந்து ஐ.அ.டொ 500 மில்லியன்களை விட அதிகமாக அதிகரித்துள்ளது. அதன் பிரகாரம், ஐ.அ.டொ 475 மில்லியன் தொகை பெறுமதியான இரண்டு சலுகைக் கடன்களையும், மற்றும் ஐ.அ.டொ 6.54 மில்லியன் தொகையுடைய இரண்டு நன்கொடைகளைக் கைச்சாத்திடுவதன் மூலம் 2014 இல் ஜப்பானிய நிதி உதவியின் நடைமுறையிலுள்ள படுகடன் தொகுதியானது அதிகரிக்கப்பட்டது. கடந்த பத்து வருடங்களாக ஜப்பானிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வருடாந்த சராசரி அர்ப்பணிப்பானது சுமார் ஐ.அ.டொ 308 மில்லியன்களாக இருந்தது.



## 2014 இன் மொத்த அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும்

2014 இல் ஜப்பானின் மொத்த அர்ப்பணிப்புக்கள், கல்வியும், பயிற்சியும், சுகாதார பராமரிப்பும், சமூக நலனும், ஊடகம், வீதிகளும் பாலங்களும் போன்ற இன்னோரன்ன அபிவிருத்தி முன்னுரிமைத் துறைகளில் பரந்திருந்தது.

**2014 இல் மொத்த அர்ப்பணிப்புக்களின் துறை வாரியான விநியோகம் (ஐ.அ.டொ. மில்லியன்)**




2015 ஆம் ஆண்டிற்கான ஜப்பானிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின் 45 ஆவது யென் கடன் பொதியின் கீழ் தேசிய பரிமாற்ற மற்றும் விநியோக அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் 2 (II) இற்கு ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திலிருந்து ஐ.அ.டொ 206 மில்லியன்களையும், ஐஅடொ 375 மில்லியன்களையும் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது

## 2014 இல் ஜப்பானின் நன்கொடை உதவி

2014 இல் ஜப்பானிய மொத்த நன்கொடை உதவியின் அர்ப்பணிப்புக்கள் ஜப்பானிய சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் உற்பத்திகளின் வழங்கல் (ஐஅடொ 1.7 மில்லியன்), மற்றும் மருத்துவ உபகரணங்களும், நலன் ஆய்வுக் கருவிகளும் (ஐஅடொ 4.8 மில்லியின் ) வழங்குவதற்கான கருத்திட்டமல்லாத நன்கொடை உதவி இன்னோரன்னவற்றை உள்ளடக்கியுள்ளது.


**44 ஆவது யென் கடன் பொதியின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஜப்பானிய அர்ப்பணிப்புக்கள்**

| கருத்திட்டம் | கடன் / நன்கொடை | தொகை (ஐ.அ.டொ மில்லியன்) | விபரம் |
|---|---|---|---|
| களனி ஆற்றின் மேலான புதிய பாலத்தின் நிர்மாணக் கருத்திட்டம் | கடன் | 342.0 | களனி ஆற்றின் ஊடாக புதிய பாலமொன்றின் நிர்மாணம், நகர்ப் பிரதேசங்களில் அதிகரிக்கப்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதற்கும் பரவலாக்குவதற்கும் கொழும்பு நகரத்தையும், கொழும்பு கட்டுநாயக்கா அதி வேகப்பாதையினை இணைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| எண்ணியல் புவிப்பரவு தொலைக்காட்சி ஒலிபரப்புக் கருத்திட்டம் - ரூ - சங்ய ” | கடன் | 134.5 | இக்கருத்திட்டம் சிறந்த படம், ஒலியின் தரம், விசாலமான அலைவரிசைகளின் தெரிவு, பயன்படுத்துவோருக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற இன்னோரன்ன சேவைகளை அதிகளவில் வழங்குவதில் கவனம் செலுத்தியுள்ள அதே வேளை, செயற்பாட்டுச் செலவுகளையும், தொலைக்காட்சி ஒலிபரப்பாளர்களின் மாற்றல் செலவுகளையும் குறைத்தல் மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினை தரமுயர்த்துதல் ஆகிய நடவடிக்கைகளுக்கும்ப் பங்களிப்புச் செலுத்துகின்றது. |

## 2014 இல் மேற்கொள்ளப்பட்ட பகிர்வுகள்

2014 ஆம் ஆண்டில் மொத்தப் பகிர்வின் அடைவான ஐ.அ.டொ 239.7 மில்லியனில் வீதிகள் மற்றும் பாலங்கள் துறைக்கான ஐ.அ.டொ 150.1 மில்லியன் உயர்வான பகிர்வின் அடைவினைச் சுட்டிக் காட்டுகின்றது

**2014 இல் மேற்கொள்ளப்பட்ட பகிர்வுகள்**




மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2014 இன் மொத்தப் பகிர்வின் அடைவானது, வீதிகள் மற்றும் பாலங்களின் அபிவிருத்திக்கான ஐ.அ.டொ 150.1 மில்லியன், சக்தியும் வலுவும் துறைக்கான ஐ.அ.டொ 36.4 மில்லியன், நீர் வழங்கல் துறைக்கான ஐ.அ.டொ 33.2 மில்லியன், சுகாதாரத் துறைக்கான ஐ.அ.டொ 7.6 மில்லியன், வறுமை ஒழிப்பு, புனர் வாழ்வுத் துறை போன்ற ஏனைய துறைகளுக்கான ஐ.அ.டொ 12.6 மில்லியன்களையும், உள்ளடக்கியுள்ளன.

**2014 இல் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்**

| கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|
| அவசர இயற்கை அனர்த்த புனர் வாழ்வுக் கருத்திட்டம் | 91.0 |
| உயர் கொத்மலை நீர்மின்சக்திக் கருத்திட்டம் | 40.0 |
| சக்தி பன்முகவாக்கல் விரிவாக்கக் கருத்திட்டம் | 7.0 |

**2014 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்**

| கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|
| **கடன்கள்** | |
| பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் (கட்டம் 1, 2 & 2-I) | 743.5 |
| கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் | 152.4 |
| மாகாண/கிராமிய வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் (மத்திய, சப்ரகமுவா மற்றும் கிழக்கு மாகாணம்) | 142.0 |
| காலித்துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் | 124.0 |
| உயர் கொத்மலை நீர்மின்சக்திக் கருத்திட்டம் (I & II) | 300.0 |

| கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன |
|---|---|
| வவுனியா கிளிசொச்சி பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம்(I & II) | 29.5 |
| நீா் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் (I & II) | 190.8 |
| வறுமை ஒழிப்பு நுண் நிதிக் கருத்திட்டம் (PAMP II) | 23.9 |
| சக்தி பன்முகவாக்கல் விரிவாக்கக் கருத்திட்டம் (பொறியியல் சேவைகள்) | 7.6 |
| கிழக்கு மாகாண நீா் வழங்கல் அபிவிருத்திக் கருத்திட்டம் | 53.0 |
| ஹபரணை – வேயங்கொடை பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம் ஹபரணை – வேயங்கொடை பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம் | 115.3 |
| எழுச்சி பெற்று வரும் பிராந்தியங்களை இலக்காகக் கொண்ட அடிப்படை சமூக சேவைகளின் விருத்தி | 47.4 |
| சிறிய மற்றும் நுண் கைத்தொழில்கள் தலைவா் மற்றும் தொழில்முயற்சிகளின் விருத்திக் கருத்திட்டம் III | 93.0 |
| சுற்றாடல் ரீதியாக நட்புறவான தீா்வு நிதி II | 50.6 |
| பாரிய கொழும்பு பரிமாற்ற மற்றும் விநியோக இழப்புக் குறைப்புக் கருத்திட்டம் | 154.8 |
| பிரதான பாலங்களின நிா்மாணக் கருத்திட்டமும், தேசிய வீதி வலையமைப்பும் | 120.2 |
| தேசிய வீதி வலையமைப்பின் மண் சரிவு அனா்த்தப் பாதுகாப்புக் கருத்திட்டம் | 74.0 |
| அனுராதபுரம் வடக்கு நீா் வழங்கல் கருத்திட்டம் (கட்டம் I) | 50.2 |
| களனி ஆற்றின் மீதான புதிய பாலங்களின் நிா்மாணக் கருத்திட்டம் | 342.0 |
| எண்ணியல் புவிப்பரவு தொலைக்காட்சி ஒலிபரப்புக் கருத்திட்டம் | 134.5 |
| **நன்கொடைகள்** | |
| கிளிநொச்சி நீா் வழங்கல் திட்டத்தின் புனா் நிா்மாணம் | 8.3 |
| மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்கான கருத்திட்டமல்லாத நன்கொடை | 11.0 |
| தூா்வாரியின் நிா்மாணத்திற்கான கருத்திட்டம் | 10.4 |
| கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் வழங்கல் | 3.7 |
| ஜப்பானிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திப் பொருட்களுக்கான கருத்திட்டமல்லாத நன்கொடை | 2.1 |
| இலங்கையின் கடுகதிப் பாதைகளுக்கான புலனாய்வு போக்குவரத்துத் தகவல் திட்டத்தின் அபிவிருத்தி | 9.9 |

# பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம்

இலங்கையின் வீதி வலையமைப்பு நிதியீட்டத்தினை பாரிய தேசிய வீதிகள் மற்றும் கடுகதிப்பாதைகளின் அபிவிருத்திக்கு ஜப்பானிய அரசாங்கம் அா்ப்பணித்துள்ளது.

கொழும்பு நகரத்துடன் தொடா்புடைய ஏனைய தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் சகல அதிவேகப்பாதைகளும் ஒன்றுடன் ஒன்று தொடா்புபடுத்தப்பட்டு நிா்மாணிக்கப்படும் வெளிவட்ட அதி வேகப்பாதை 6 ஒழுங்கைகளைக் கொண்டுள்ளதோடு, அதன் நீளம் 29.1 கி. மீற்றர்களாகவும் உள்ளது. இக்கருத்திட்டத்தின் மூலம் கொழும்பு நகரத்தைச் சாா்ந்து துரிதமாக உயா்வடைந்து செல்லும் போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதோடு, அதிக அளவு சன நெருக்கடியைக் கொண்ட நகா்ப் பிரதேசங்கள் பலவற்றுடன் மேற்கு மாகாணத்திற்கு வெளியே நாட்டின் ஏனைய பிரதேசங்களை நோக்கி அபிவிருத்தியை எடுத்துச் சென்று ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார வளா்ச்சியொன்றை ஏற்படுத்துவதற்கு எதிா்பாா்க்கப்படுகின்றது.

ஐ.அ.டொ 186 மில்லியன் ஜப்பானிய நிதி உதவியினைத் திரட்டுவதன் மூலம் கொட்டாவையிலிருந்து கடுவலை வரையிலான 12 கி. மீ நிா்மாணம் ஏற்கனவே பூா்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, ஜப்பானிய உதவியுடன் கடுவலையிலிருந்து கடவத்தை வரையிலான 8.9 கி. மீ நீளமான வீதிப் பிரிவு செயற்பாட்டிலுள்ளது. கடுவலையிலிருந்து கடவத்தை வரையிலான வெளிவட்ட அதி வேகப் பாதை கொழும்பு பெரு நகர் பிராந்தியித்தின் போக்குவரத்து நெருக்கடியை குறைக்க உதவுவதோடு, தெற்கு அதிவேகப்பாதை கண்டி – கொழும்பு அதி வேகப்பாதை, கொழும்பு கட்டுநாயக்கா கடுகதிப்பாதை மற்றும் கொழும்பு நகரத்துக்கு இணைக்கப்பட்டுள்ள ஏனைய தேசிய வீதிகளுடனான தொடா்பினை விருத்தி செய்யும். மேலும், இக்கருத்திட்டத்திலிருந்து உச்ச அளவிலான நன்மைகளை அடையும் நோக்குடன் பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டமானது வீதி, நீா், மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசிய வசதிகளுடன் மாகும்புர, (கொட்டாவ), கடுவலை மற்றும் கடவத்தை பிரதேசங்களின் மூன்று நகர மயமாக்கல் அபிவிருத்தியினை உள்ளடக்கியுள்ளது.

## ஹபரணை–வேயங்கொடை பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம்

ஹபரணை – வேயங்கொடை பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம் தடைகளின்றி தொடர்ச்சியான மின்சக்தி வழங்கலை உறுதி செய்வதுடன் வர்த்தக சமூகத்திற்கு வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்களிப்புச் செலுத்துவதோடு, உற்பத்தியாளர்கள் அதிக அளவில் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையிலும், உற்பத்தித் திறன் வாய்ந்த முறையிலும் பொருளாதார நடவடிக்கைகளை பேணுவதற்கும் உதவும்.

ஜப்பானிய அரசாங்கம் தேசிய வலையமைப்பில் முன்மொழியப்பட்ட சாம்பூர் திருகோணமலையிலுள்ள் அனல் மின்நியையத்தில் சக்தி உருவாக்கத்தினை பரிமாற்றம் செய்வதன் மூலம் நாட்டின் சக்தித் தேவைகளை அடைவதற்கு உதவம் புதிய ஹபரணை நிலை மாற்றி நிலையமொன்றை (எஸ்எஸ்) நிர்மாணிப்பதற்கும், புதிய ஹபரணை எஸ்எஸ் மற்றும் வேயங்கொடைக்கும் இடையில் 220 கிவோ பரிமாற்ற வரிசையை நிர்மாணிப்பதற்கும் ஐஅடொ 115 மில்லியன்களை வழங்கியுள்ளது.

## களனி ஆற்றுக்கு ஊடான புதிய பாலத்தின் நிர்மாணக் கருத்திட்டம்

கொழும்பு- கட்டுநாயக்கா அதிவேகப்பாதையைத் திறந்ததன் விளைவாக தற்போது உள்ள களனிப் பாலத்தைச் சார்ந்துள்ள போக்குவரத்து நெருக்கடியானது உயர்வடைந்து சென்றுள்ளது. எனவே, இதற்கான ஒரு தீர்வாக ஜப்பானிய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் 6 வரிசைகளைக் கொண்டதாக அமையும் வகையில் புதிய களனிப் பாலம் நிர்மாணிக்கப்படும். இதன் மூலம் தற்போதுள்ள புதிய களனிப் பாலத்திற்கு அருகாமையிலுள்ள களனிப் பாலத்தைச் சுற்றி போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பது மாத்திரமல்லாமல் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடனும், கொழும்பு-கட்டுநாயக்கா அதிவேகப்பாதைக்கும், நகரப் போக்குவரத்து வலையமைப்பிற்கும் இடையில் தொடர்பொன்று உருவாக்கப்படும்.

கொழும்பு நகரத்தின் முன் மொழியப்பட்ட மின் உயர்த்தி வீதி வலையமைப்பிற்கு வசதியளிப்பதற்கு பண்டாரநாயக்கா சுற்றி வளைப்பில் படி நிலை வேறாக்கப்பட்ட இடைப்பரிமாற்றத்துடன் பாலம் நிர்மாணிக்கப்படும். மின்தூக்கிப் பாலமானது படி நிலை வேறாக்கி ஒன்றுடன் கொழும்பு-கட்டுநாயக்கா அதிவேகப்பாதையின் வாயிலுடன் இணைக்கப்படும்.

## களு கங்கை நீர் வழங்கல் கருத்திட்டம்

களு கங்கையானது, புதிய நீர் வளமொன்றாக ஜப்பானிய யென் 19,666 மில்லியன் (அண்ணளவாக ரூபா 25,369.14 மில்லியன்) தொகை ஜப்பானிய நிதி உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இக்கருத்திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு 60,000 கன மீற்றர் நீரைச் சுத்திகரிக்கக் கூடிய நீர் சுத்திகரிப்பு நிலையம், பரிமாற்றம், விநியோகக் குழாய் வழி மற்றும் நீர்க் கோபுரங்கள் ஆகியன நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இக்கருத்திட்டம் நீர்க்கசிவுகளைக் குறைப்பதன் மூலம் சேவை மட்டங்களை உயர்த்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேலும், இக்கருத்திட்டமானது, எதிர்கால நீர்த்துறை அபிவிருத்திக்கான வழிகாட்டலை வழங்கும் மேல் மாகாண பெருந்திட்டத்தினை புதுப்பிப்பதற்கும் உதவுகின்றது. இக்கருத்திட்டத்தில் பண்டாரகமை, பிலியந்தலை, கெஸ்பேவ, ஜபுரலிய மற்றும் கொழும்பு தென் பகுதி ஆகிய பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# கொரியா

இலங்கை அரசாங்கத்தின் உபாய ரீதியான அபிவிருத்தி முன்னுரிமைகளுக்குப் பங்களிப்புச் செலுத்தும் உற்பத்தித் திறன் வாய்ந்த இரு தரப்பு அபிவிருத்திப் பங்கேற்பாளர்களுள் ஒருவராக கொரியா அரசாங்கம் விளங்குகின்றது. 1990 ஆம் ஆண்டிலிருந்து கொரியா அரசாங்கம் கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியின் ஊடாக அதன் கடன் உதவியை வழங்கி வருவதோடு, நன்கொடை உதவியினை கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக வழங்கி வருகின்றது.

2008 ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிட்ட ஒரு காலப்பிரிவிற்கு பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியின் கீழ் நிதி உதவி வழங்கப்பட வேண்டிய மொத்தக் கடன் நிதிக்கான உச்ச வரம்பினைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் கொரியா அரசாங்கத்திற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் வேலைச்சட்டக ஏற்பாடு கைச்சாத்திடப்பட்டது. அதன் பிரகாரம், முறையே 2008–2009, 2009–2012, 2012–2015 ஆம் ஆண்டு காலப்பிரிவுகளில் மூன்று வேலைச்சட்டக ஏற்பாடுகளைக் கைச்சாத்திடுவதன் மூலம் கொரியா அரசாங்கத்திடமிருந்து ஐ.அ.டொ 140 மில்லியன் ஐ.அ.டொ 200 மில்லியன், மற்றும் ஐ.அ.டொ 290 மில்லியன் நிதி உதவிகளை அரசாங்கம் பெற்றுக் கொண்டது.

**கொரியா கடன் உதவியின் தற்போதைய நியதிகளும், நிபந்தனைகளும்**

| நியதிகளும், நிபந்தனைகளும் | சாதாரண நிபந்தனைகள் | கொரியா ஆலோசனையாளர்கள் பங்கேற்றல் | புத்துயிரூட்டும் சக்தித் துறை |
|---|---|---|---|
| வட்டி வீதம் | 0.20% | 0.15% | இலவசம் |
| மீள் கொடுப்பனவு | 30 வருடங்கள் | 40 வருடங்கள் | |
| தயவுக் காலப்பிரிவு | 10 வருடங்கள் | | 10 - 15 வருடங்கள் |
| கடன் தொகை | மொத்தக் கருத்திட்டச் செலவில் 100 சதவீதம் வரை | | |
| நாணயம் | கொரியா வொன் | | |
| சாத்திய வள ஆய்வு | சாத்தியமான கருத்திட்டங்களுக்கு நன்கொடை அடிப்படையில் ஆதரவு | | |

இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை வேலைச்சட்டகத்திற்சுகு இணங்க, 2012–2016 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கான நாட்டின் பங்கேற்பு உபாயத்தின் கீழ் உதவி வழங்கப்பட வேண்டிய முன்னுரிமை பெற்ற துறைகளாக பொருளாதார, சமூக உட்கட்டமைப்பு, தொழில்நுட்பப் பரப்புகளின் கல்வி, தொழில்சார் கல்வி, பயிற்சியும், இரண்டாந்தரக் கல்வியும், மற்றும் நல்லாட்சியும் இனங்காணப்பட்டுள்ளன.

**பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியின் நிதியீட்டிற்கு 2014 ஆம் ஆண்டில் அர்ப்பணிக்கப்பட்ட கருத்திட்டங்கள்**

| கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் | நோக்கம் |
|---|---|---|
| தெதுறு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம் | 58.1 | குழாய் நீர் வழங்கல் திட்டத்தினை அபிவிருத்தி செய்வதன் மூலம் குருநாகலை மாவட்டத்தில் மகவ, பொல்பித்திகமை, பிரிவுகளிலுள்ள வதிவாளர்களுக்கு பாதுகாப்பான குடி நீரை வழங்கல் |
| ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டம் | 20.5 | குழாய் நீர் வழங்கல் திட்டத்தினை அபிவிருத்தி செய்வதன் மூலம் கேகாலை மாவட்டத்தில் ருவன்வெல்லை பிரிவிலுள்ள வதிவாளர்களுக்கு பாதுகாப்பான குடி நீரை வழங்கல். |

# கொரியா நன்கொடை உதவி

சிறிய அளவிலான கருத்திட்டங்களுக்கு நிதி வழங்கும் நோக்குடனும், தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தும் நோக்குடனும், நிபுணத்துவர்கள் மற்றும் தன்னார்வாளர்களை அனுப்பும் நோக்குடனும் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக இலங்கை அரசாங்கத்திற்கு கொரியா அரசாங்கத்தினால் நன்கொடை உதவி வழங்கப்பட்டது. கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நன்கொடை உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட தொம்பையிலுள்ள துப்புரவாக்கல் காணி நிரப்பு நிர்மாணக் கருத்திட்டம், கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகளின் நிர்மாணம் ஆகியன 204 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டன.

2014–2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் நன்கொடைக் கருத்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட நிதி

| கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|
| தொழில்நுட்பப் பாடங்களுக்காக ஆசிரியர் பயிற்சி நிலையமொன்றை ஸ்தாபித்தல் | 13.0 |
| கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் - கொடிகாவத்தை – முல்லேரியாவ | 5.2 |
| எண்ணியல் பல்லூடக குற்றப் புலனாய்வு நிலையத்தை ஸ்தாபித்தல் | 3.2 |

# தொம்பே துப்புரவாக்கல் காணி நிரப்பு நிர்மாணக் கருத்திட்டம்


இக்கருத்திட்டத்தின் கீழ் சுற்றாடல் நட்புறவுத் தீர்வொன்றாக பழைய குப்பைகளை முற்றுப் பெறச் செய்வதற்கு புதிய திண்மக் கழிவு முகாமைத்துவ முறைமை துப்புரவாக்கல் காணி நிரப்பு நிர்மாணக் கருத்திட்டத்தின் வடிவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் ஒரு நாளைக்கு 10 மெட்ரிக் தொன்கள் கழிவுகளைச் சுத்திகரிப்பதற்கு வசதியளிப்பதோடு, இதன் இயலளவு 20,000 மெட்ரிக் தொன்களாக இருப்பதோடு, அது காணிநிரப்பும் வேலைகள் பூர்த்தி செய்யப்படும் வேளையில் 10–15 வருட காலப்பிரிவுகளுக்குப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் நன்கொடையாக ஐ.அ.டொ 4.5 மில்லியன்களுக்கு வசதியளிப்புச் செய்துள்ளதோடு, இலங்கை அரசாங்கம் ஐ.அ.டொ 1.5 மில்லியன்களையும் வழங்கியுள்ளது. இது விருத்தியுற்ற நவீனமயமான துப்புரவாக்கல் காணி நிரப்புத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் இலங்கையில் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான ஒன்றிணைக்கப்பட்ட முதலாவது தீர்வாகும்.

இது காணி நிரப்பு, சுத்திகரிப்பு நிலையம், ஆகியனவற்றுடன் தொடர்புடைய நிர்மாண வேலைகள் மற்றும் சோதனையோட்டம் உள்ளடங்கலாக கட்டடப் பராமரிப்பு ஆகிய இன்னோரன்ன நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பூர்த்தி செய்யப்படுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளன.

## 2014 இல் அர்ப்பணிப்புக்கள்


**கொரியாவின் கடன் மற்றும் நன்கொடை உதவி (2005 -2014) ஐஅடொ மில்லியன்**



முறையே 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கடன் அர்ப்பணிப்புக்கள் ஐ.அ.டொ 59.5 மல்லியன்களாகவும், .ஐ.அடொ 78.6 மில்லியன்களாகவும் இருந்துள்ளதோடு, இது கடந்த பத்தாண்டு காலப்பிரிவில் கொரியாவினால் மேற்கொள்ளப்பட்ட கடன் அர்ப்பணிப்புக்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அடைவினைக் காட்டுகின்றது. அதன் பிரகாரம், தெதுறு ஓயாவிற்கான கடன் நிதி – (ஐ.அ.டொ 582. மில்லியன்கள்), ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டங்கள் (ஐ.அ.டொ 20.5 மில்லியன்கள) குருநாகலை மற்றும் கேகாலை மாவட்டங்களில் சுத்தமான குழாய் நீர் வசதிகளை வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டன.

## 2014 இல் பகிர்வுகள்

**2014 இல் கடன் பகிர்வுகளின் துறை வாரியான விநியோகம் (ஐஅடொ மில்லியன்)**




2014 ஆம் ஆண்டில் கொரியா உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பகிர்வுகள் ஐ.அ.டொ 20.2 மில்லியன்களாக இருந்ததோடு, 2014 ஆம் ஆண்டின் ஆண்டின் பகிர்வுகளில் 66 சதவீதம் வீதிகளும், பாலங்களும் துறைக்கே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

# தெதுறு ஓயா மற்றும் ருவன்வெல்லை நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

தெதுறு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மூலம் குருநாகலை மாவட்டத்தின் மஹவ மற்றும் பொல்பிதிகமை பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு குடி நீர் வசதியை வழங்கப்படும்.. இக்கருத்திட்டத்தின் மூலம் நாளாந்தம் 15,000 கன மீற்றர் நீரைச் சுத்திகரிக்கக் கூடிய கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றும், 750 கன மீற்றர், 1000 கன மீற்றர் மற்றும் 1,500 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர்க் கோபுரங்களும், மற்றும் 266 கிலோ மீற்றர் நீளமுள்ள நீரை விநியோகிக்கும் வலையமைப்பு ஒன்றும் நிர்மாணிக்கப்படும். இக்கருத்திட்டம் மகவ மற்றும் பொல்பித்திகம பிரதேசங்களில் நீர் வழியான நோய்களின் நிகழ்வுகளைக் குறைப்பதற்கும், குடி நீர்ப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வசதியளிக்கும்.

இலங்கையின் கேகாலை மாவட்டத்திலுள்ள ருவன்வெல்லை நகரம் குடி நீருக்கான பிரதான மூலமாக ஊற்றுக் கிணற்று நீரினைப் பயன்படுத்துகின்றது. வறண்ட காலப்பிரிவில் ஊற்றுக் கிணறுகள் வற்றிப் போவதோடு, இப்பிரதேசத்திலுள்ள மக்கள் இக்காலப்பிரிவில் குடி நீர் பற்றாக்குறையினால் வருந்துகின்றனர். பிரதானமாக மலைப் பிரதேசங்களில் வாழும் மக்கள் இவ்வறண்ட காலப்பிரிவில் நீரைப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றனர். குழாய் மூலமான நீர் வழங்கல் முறைமை ஒன்று ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்படவுள்ளதோடு, இது இக்குடி நீர் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு உதவுவதோடு, அதன் மூலம் இப்பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும் வழி வகுக்கும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடையும் நோக்குடன் கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதி முறையே ஐ.அ.டொ 58,155,000 மற்றும் ஐ.அ.டொ 20,530,000 மில்லியன்களை தெதுறு ஓயா மற்றும் ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கு கடனாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதியளவில் நிதி உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு, இக்கருத்திட்டங்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும்.



# உலக வங்கி, சர்வதேச நாணய நிதியப் பிரிவு

## உலக வங்கிக் குழுவுடனான அபிவிருத்திப் பங்கேற்பு

இலங்கை நடுத்தர வருமான நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளதனால், இலங்கையின் துரிதப்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு உலக வங்கிப் பிரிவு உலக வங்கிக்கு குழு மற்றும் சர்வதேச நாணய நிதிய நிதியினைத் திரட்டுவதோடு, நிர்வகித்தும் வருகின்றது.

நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கு வெளிநாட்டு வளங்களைத் திரட்டுவதில் இலங்கை அரசாங்கம் உலக வங்கியுடன் நீண்ட பங்கேற்பினை மேற்கொண்டு வந்துள்ளது. நாட்டின் பங்கேற்பு உபாயம் எனப்படும் தொழில் ஏற்பாட்டின் கீழ் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியின் ஊடாக இவ்வுதவிகள் கடன்களாகவோ அல்லது நன்கொடைகளாகவோ செலுத்தப்படுகின்றன. தற்போதைய அவ்வாறான உபாயம் 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் தொடக்கம் 2016 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரையிலான காலப்பிரிவில் அமுலில் இருந்து வந்துள்ளது. தற்போதைய நாட்டின் உதவி உபாயத்தின் கீழான செயற்பாட்டில் உள்ள கடன் தொகுதி ஐ.அ.டொ 1934.6 மில்லியன்களாகும்.

புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியின் நிதியீடுகள் சலுகை அடிப்படையிலானதும், சலுகை அடிப்படையிலல்லாததுமான நியதிகளுடன் கலக்கப்பட்டவையாக இருந்தாலும் கூட, 2014 ஆம் ஆண்டில் அரசாங்கம் சலுகை அடிப்படையிலான சர்வதேச அமைப்பின் நிதி நியதிகளின் கீழ் அல்லது நன்கொடைகளாக உலக வங்கியின் நிதியில் பெரும்பகுதியை பயன்படுத்துவதற்கான சகல முயற்சிகளையும் எடுத்துள்ளது.

**2014 இல் செயற்பாட்டிலிருந்த உலக வங்கியின் கடன் தொகுதி**

| நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|
| திறன்கள் அபிவிருத்தி | 99.7 |
| அணை பாதுகாப்பும், நீர் வளங்களின் திட்டமிடல் | 148.8 |
| உபாய ரீதியான நகரங்களின் அபிவிருத்திக் கருத்திட்டம் | 144.4 |
| அவசர காலநிலை அனர்த்தத்திற்கான விஷேட கடன் நிகழ்ச்சித் திட்டம் | 102.0 |
| காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் | 110.9 |
| அனர்த்த இடர் முகாமைத்துவக் கருத்திட்டம் | 0.4 |
| கல்வித்துறை அபிவிருத்தி வேலைச்சட்டக நிகழ்ச்சித் திட்டம் | 128.3 |
| வட கிழக்கு உள்ளூராட்சி மன்ற சேவைகளை விருத்தி செய்வதற்கான கருத்திட்டம் | 70.8 |
| சுகாதாரத் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 196.0 |
| திரி சவிய | 0.9 |
| கொழும்பு பெரு நகர் அபிவிருத்திக் கருத்திட்டம் | 213.9 |
| குதங்களின் பற்றுச் சீட்டு நிதி முறைமைக் கருத்திட்டம் | 6.5 |
| துப்புரவாக்கல் சேவைகளுக்கான இலங்கையின் பிரவேசத்தினை விருத்தி செய்தல் கருத்திட்டம் | 5.1 |
| பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினைப் பலப்படுத்தல் | 0.5 |
| வட மாகாணத்தில் பிரதேச மட்டத்திலான போசாக்கு மட்டத்தினை மேம்படுத்தும் கருத்திட்டம் | 2.7 |
| வீதித் துறை உதவிக் கருத்திட்டம் | 298.1 |

| நிகழ்ச்சித்திட்டம்/கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் அபிவிருத்தி வசதியளிப்பு | 57.4 |
| மாகாண வீதிகளின் கருத்திட்டம் | 105.0 |
| இருபத்தி ஒறாம் நூற்றாண்டிற்கான உயர் கல்வி | 40.0 |
| இரண்டாம் சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார விருத்திக் கருத்திட்டம் | 75.0 |
| மீளெழுச்சியூட்டும் கருத்திட்டம் | 124.7 |
| **மொத்தம்** | **1,931.1** |

# அர்ப்பணிப்புக்கள்

இலங்கை அரசாங்கம் 2014 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ 570 மில்லியன்களைக் கடன்களாகவும், நன்கொடைகளாகவும் உலக வங்கியிடமிருந்து திரட்டியுள்ளது. ஆயினும், இவ்வர்ப்பணிப்புக்கள் நாட்டின் நடுத்தர வருமான நிலைமையினை உயர் மட்டத்துக்கு மாற்றியமைக்கும் நோக்குடன் நகர அபிவிருத்திக்காக ஐ.அ.டொ 147 மில்லியன்களும், காலநிலை மாற்றத்தின் காரணமாக மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்காக ஐ.அ.டொ 295.5 மில்லியன்களையும் பெற்றுக் கொடுத்தலானது 2014 ஆம் ஆண்டில் உலக வங்கியின் பிரதான முதலீடுகளாக இருந்தன. இவ்வாறான துறைகளில் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகளவிலான முதலீடுகளின் வெளிப்படுத்தப்படுவது என்னவென்றால், காலநிலை நிதியீடு மற்றும் நகர அபிவிருத்தி போன்ற நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடுத்தர மற்றும் நீண்ட ஒரு காலப்பிரிவினை எடுக்கும் முதலீட்டுத் துறைகளுககு உலக வங்கி போன்ற சலுகை அடிப்படையிலான நிதி மூலங்களின் மூலம் கடனைப் பெற்றுக் கொள்வது அரசாங்கத்தின் குறிக்கோளாகும என்பதாகும்.

**2014 இல் உலக வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட நிதி/ நன்கொடை உடன்படிக்கைகள்**


| கருத்திட்டம் | கடன் / நன்கொடை தொகை ஐ.அ.டொ மில்லியன் | சிறப்பியல்புகள் |
|---|---|---|
| இலங்கை கல்வித்துறை அபிவிருத்தி வேலைச்சட்டக நிகழ்ச்சித் திட்டம்- விரிவாக்கம் | 16.3<br>நன்கொடை | 2012 இல் ஐ.அ.டொ 100 மில்லியன் அர்ப்பணிக்கப்பட்ட அமுலில் இருக்கும் அறிவுக் கேந்திரத்தின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல்'' கருத்திட்டத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கும், பலப்படுத்துவதற்கும். |
| உபாய ரீதியான நகரங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 144.4<br>கடன் | கண்டி மற்றும் காலி நகரப் பிராந்தியங்களை விருத்தி செய்தல். இதன் மூலம் உலக மரபுரிமை பெற்ற நகரமான கண்டி நகரத்தின் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்தலும், தரத்தில் உயர்ந்த நகர சேவைகளை வழங்குவதோடு. காலி நகரத்தில் வெள்ளப் பெருக்கத்தினைக் குறைத்தலும், நகர்ப்பிரதேசங்களில் பொது இடங்களை விருத்தி செய்தலும் இடம் பெறும். |
| அணை பாதுகாப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டமிடல் கருத்திட்டத்திற்கான மேலதிக நிதி | 81.5<br>கடன் | மூலக் கருத்திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கப்பட்டிருக்காததனாலும் அதன் உள்ளடக்கத்தினை இம்மாகாணங்களுக்கு நீடிக்கப்பட்டதனாலும், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட அணை பாதுகாப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டமிடல் கருத்திட்டத்திற்கு மேலும் உதவி செய்தல். |

| கருத்திட்டம் | கடன் / நன்கொடை தொகை ஐ.அ.டொ மில்லியன் | நோக்கம் |
|---|---|---|
| காலநிலை மீட்டெழுச்சி விருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 110.9 கடன் | (i). காலநிலை மாற்றங்களினால் பாதிப்புக்கு உள்ளாகும் சொத்துக்கள் மற்றும் மக்களின் உயிர்களை மீண்டுத் பழைய நிலைமைக்கு மாற்றுவதற்கு அவசியமான உடனடியான நிதித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு “அவசர அனர்த்தங்களுக்கான விஷேட கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐ.அ.டொ 102 மில்லியன்கள் பயன்படுத்தப்படும்.<br><br>(ii). காலநிலை மாற்றங்களினால் பாதிப்புக்கு உள்ளாகலாம் என எதிர்பார்க்கப்படும் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளின் உறுதித் தன்மையை விருத்தி செய்யும் நோக்குடன் நீர்ப்பாசனத் துறையின் வசதிகளின் அபிவிருத்திக்கு காலநிலை இடர்களைக் குறைப்பதற்கான கருத்திட்டத்தின் கீழ் ஐ.அ.டொ 110 மில்லியன்கள் பயன்படுத்தப்படும். |
| அவசர அனர்த்தத்திற்கான விஷேட கடன் நிகழ்ச்சித் திட்டம் | 102.0 கடன் | |
| திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 99.7 கடன் | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தைகளின் கேள்விக்கு ஏற்ப 2020 ஆம் ஆண்டளவில் வினைத் திறனான திறன்களின் அபிவிருத்தி முறைமை ஒன்றினை கட்டியெழுப்புவதற்கான உபாய ரீதியான திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல். 823,000 இளைஞர்களுக்கான தொழில்நுட்ப, தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சியொன்றினை வழங்குவதே இதன் குறிக்கோளாகும். |
| வட கிழக்கு உள்ளூர் சேவைகளின் விருத்திக் கருத்திட்டம் - மேலதிக நன்கொடை நிதி | 20.3 நன்கொடை | உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் மிகச் சிறந்த சேவையொன்றினை வழங்குவதற்காக வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தினை ஊவா, மத்திய மற்றும் வட மேற்கு மாகாணங்களிலும் ஆரம்பித்து வைத்தல். |
| அனர்த்த இடர் முகாமைத்துவக் கருத்திட்டம் | 0.4 நன்கொடை | கிழக்கு மாகாணத்தின் 10 நகர சபைகளுக்கு அனர்த்த மதிப்பீட்டுச் செயன்முறையொன்றை மேற்கொள்ளல், அனர்த்த முகாமைத்துவத்திற்கான நிறுவனங்களில் தொழில்நுட்ப இயலளவை அபிவிருத்தி செய்தலும், மத்திய மலை நாட்டில் நிலச்சரிவு இடர் முகாமைத்துவத்தின மேற்கொள்ளல். |

## பகிர்வுகள்

உலக வங்கியின் தற்போதைய கடன் தொகுதி 21 கருத்திட்டங்களை உள்ளடக்கியுள்ளதோடு, அவற்றின் மூலம் 2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் ஐ.அ.டொ 195.6 மில்லியன் தொகையினை பகிரக் கூடியதாக இருந்தது. 2014 ஆம் ஆண்டில் உயர்வான பகிர்வான ஐ.அ.டொ 52.4 மில்லியன் (27 சதவீதம் வீதிகளும், போக்குவரத்தும் துறைக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. பல் துறை (பிராந்திய அபிவிருத்தி) இரண்டாவது உயர்வான பகிர்வான ஐஅடொ 42.3 மில்லியன்களை (22 சதவீதம் அறிக்கையிட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் பல் துறைக்கான பகிர்விற்கு அடுத்ததாக சுகாதாரம், நீர்ப்பாசனம், கல்வித் துறைகள் குறிப்பிடத்தக்க பகிர்வுகளை அறிக்கையிட்டிருந்தன. அதாவது முறையே ஐஅடொ 26.8 மில்லியன் (14 சதவீதம்), ஐஅடொ 26.5 மில்லியன் (13 சதவீதம்) மற்றும் ஐஅடொ 24.4 மில்லியன்களை (12 சதவீதம்) அறிக்கையிட்டிருந்தன.

2014 இல் பகிர்வின் துறை வாரியான விநியோகம்




## 2014 இல் இடம் பெற்ற பிரதான நிகழ்வுகள்

இயற்கை அனர்த்தமொன்றிற்குப் பிறகு அனர்த்த நிலைமையொன்று அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் ஒரு பகுதியாகவோ அல்லது முற்றாகவோ உடனடியாக நிதியினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய புதிய நிதி மூலமொன்றாக "அவசர காலநிலை அனர்த்தங்களுக்கான விஷேட கடன் நிகழ்ச்சித் திட்டத்தின்" கீழ் ஐ.அ.டொ 102 மில்லியன் நிதி இலங்கையினால் பெற்றுக் கொள்ள முடிந்தது. இக்கடன் வசதியளிப்பினை ஆசியாவில் முதன் முதலாகப் பெற்றுக் கொண்ட நாடு இலங்கையாகும். தற்போது பகிரப்படாத இக்கடன் வசதியளிப்பு தேவையேற்படும் போது இலங்கையினால் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## முன் நோக்கிய வழி

2015 இல் கைச்சாத்திடுவதற்கு எதிர்பார்க்கப்படும் பின்வரும் கடன்களின் தயாரிப்புக் கட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்களின் தொடர்களில் அரசாங்கத்தினால் ஈடுபட முடிந்தது.

2015 இல் வரவுள்ள கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ. மில்லியன் | மூலம் |
|---|---|---|
| நீர் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் | 100 | சஅஅ |
| இளம் பிராய அபிவிருத்திக் கருத்திட்டம் | 50 | சஅஅ |
| போக்குவரத்து இணைப்புக் கருத்திட்டம் | 125 | புஅசவ / சஅஅ |
| வட கிழக்கு உள்ளூர் சேவைகளின் விருத்திக் கருத்திட்டத்திற்கான மேலதிக நிதி | 20 | சஅஅ |

# மத்திய கிழக்கும் தென்னாசியப் பிரிவும்

## மத்திய கிழக்கு

மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திப் பங்கேற்பாளர்கள் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்கைச் செலுத்தியுள்ளன. 1970களின் நடுப்பகுதியிலிருந்து நாட்டின் அபிவிருத்தி முன்னுரிமைகளை மையமாகக் கொண்டு மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திப் பங்கேற்பாளர்கள் மூலம் ஐ.அ.டொ 1,177 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டின் பின்னரான தொடர்ச்சியான அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அதிக அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிப் பெறுகைகளில் பிரதான பங்கு நீர்ப்பாசனம், வீதிகள், பாலங்கள், சக்தியும், வீதிகள், பாலங்கள், சக்தியும், வலுவும் மற்றும் சுகாதாரத் துறை ஆகிய துறைகளில் முதலிடப்பட்டுள்ளன.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் சலுகை அடிப்படையிலான நிதிசார் நியதிகள, நிதியீட்ட வசதியளிப்பின் நீண்ட முதிர்வும், நெகிழ்வான நிபந்தனைகளும் நாட்டிற்கு மிகவும் சாதகமானதாக உள்ளன.

### மத்திய கிழக்கு நாடுகளின் அபிவிருத்திப் பங்காளர்கள்

அபிவிருத்திக்கான சவூதி நிதி, சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி, அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதி, ஈரானிய அரசாங்கம் போன்ற மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திப் பங்காளர்கள் அபிவிருத்தி உதவியை வழங்குவதில் தமது சொந்த நிறுவன ரீதியான முன்னுரிமைகளைக் கொண்டுள்ளதோடு, அபிவிருத்திக்கான சவூதி நிதி, சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி ஆகியன வறுமைக் குறைப்பை மையமாகக் கொண்டுள்ளன. மத்திய கிழக்குப் பிராந்தியத்துடனான இரு தரப்பு உறவினை விரிவடையச் செய்யும் நோக்குடன் இஸ்ரேல் மற்றும் அபுதாபி ஆகிய நாடுகளுடன் ஆரம்பப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளது.

## அபிவிருத்திக்கான சவூதி நிதி

அபிவிருத்திக்கான சவூதி நிதியானது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காக 1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பிடப்பட்ட நாடுகளுக்குக் கடன்களை வழங்குவதன் ஊடாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பதில் பங்கேற்பதும், நிதியை வழங்குவதன் மூலம் மசகல்லாத எண்ணெய்யின் ஏற்றுமதிக்குக் காப்புறுதி வசதிகளை வழங்குவதன் மூலம் இவ்வேற்றுமதிகளை மேம்படுத்துவதுமே இந்நிதியின் அடிப்படை நோக்கங்களாகும்.

இலங்கையின் நீர்ப்பாசனம், வீதிகள், சுகாதாரத் துறைகளின் கீழான அபிவிருத்தி முன்னுரிமைகள் அபிவிருத்திக்கான சவூதிநிதியின் மூலம் நிதிப்படுத்தப்படுத்தப்பட்டு:ள்ளதோடு, தற்போதைய மொத்தக் கடன் தொகுதி ஐ.அ.டொ 123 மில்லியன்களாகும்.

அபிவிருத்திக்கான சவூதிநிதியினால் நிதி உதவி வழங்குவதற்கு முன் மொழியப்பட்டுள்ள அண்ணளவாக ஐ.அ.டொ 180 மில்லியன்கள் தொகையைக் கொண்ட ஐந்து அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆரம்பக் கட்டத்தில் உள்ளன. இக்கருத்திட்டங்கள் 2015 இல் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளன.

# சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி

1976 ஆம் ஆண்டிலிருந்து விஷேடமாக வீதிகள், நீர்ப்பாசனம், சக்தியும் வலுவும் துறைகளிலான பல எண்ணிக்கையான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் நாட்டின் துரித அபிவிருத்திக்கு வசதியளிப்பதற்காக சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

கருத்திட்டக் கடன், நிகழ்ச்சித் திட்டக் கடன், கொடுப்பனவு மீதியைத் தீர்ப்பனவு செய்வதற்கான கடன் போன்ற அரச துறைக்கான நான்கு வேறுபட்ட வகையிலான கடன்களை வழங்கியுள்ளது.

அதன் பிரகாரம், ஐ.அ.டொ 187 மில்லியன் அரச துறைக்கான கடன் வசதியளிப்புக்களாக வழங்கப்பட்டுள்ளதோடு, அவற்றில் வீதித் துறை அபிவிருத்திக்கான பங்களிப்பு ஐ.அ.டொ 107 மில்லியன்களாக இருந்ததோடு, அத்தொகையானது மொத்த நிதியீட்டில் 57 சதவீதமாகவும் இருந்தது.

தேசிய அபிவிருத்தி வங்கி, லங்கா ஓரிக்ஸ் லீஸிங் கம்பனி (எல்ஓஎல்சீ) மைக்ரோ கிரடிட் லிமிட்டட் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பிற்கும், பாதுகாப்பிற்குமான உடன்படிக்கையின் கீழ் த லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனி போன்ற தனியார் துறை நிறுவனங்களுக்கு ஐ.அ.டொ 55 மில்லியன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

# அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட்நிதி

இலங்கை அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியுடனான தனது முதலாவது உடன்படிக்கையை 1976 ஆம் ஆண்டில் மேற்கொண்டது. அதிலிருந்து அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதி நாட்டின் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு ஐ.அ.டொ 195.5 மில்லியன்களை வழங்கியுள்ளது. 1976 ஆம் ஆண்டிலிருந்து அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியின் 95 சதவீதத்துக்கும் அதிகமான நிதி நாட்டின் நீர்ப்பாசனத் துறையின் அபிவிருத்திக்கு பிரதானமாக மகாவலி முறைமை "சீ" அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் களு கங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் ஆகியனவற்றிற்கு முதலிடப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டில் 25 பாலங்களை புனர் நிர்மாணம் செய்வதற்காக மற்றுமொரு நீதி உடன்படிக்கையைச் மேற்கொள்வதன் மூலம் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியுடனான அபிவிருத்தி ஒத்துழைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும்


2014 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியுடனான பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியுடனான தேசிய வீதி வலையமைப்பில் 25 பாலங்களைப் புனர் நிர்மாணம் செய்வதற்காக ஐ.அ.டொ 35 மில்லியன் தொகை பெறுமதியான அர்ப்பணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மட்டக்களப்பு திருகோணமலை வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தில் எஞ்சியுள்ள கடன் மீதியினை பயன்படுத்துவதன் மூலம் தட்டுத் துறை பாலத்தினை நிர்மாணிப்பதற்கான நிதி உதவியை வழங்குவதகு இணக்கம் தெரிவித்துள்ளது.

மேலும், நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை நோக்கிய நாட்டின் அபிவிருத்தி முன்னெடுப்புக்களுக்கு அதிகளவில் கவனம் செலுத்துவதன் மூலம் நாட்டின் தேசிய வீதித் துறை அபிவிருத்திக்கு ஐ.அ.டொ 77 மில்லியன்களை வழங்குவதற்கு பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதி இணக்கம் தெரிவித்துள்ளது. அத்தொகையில் ஐ.அ.டொ 17 மில்லியன் மேல் மாகாண வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கும், ஐ.அ.டொ 60 மில்லியன் பதுளை – செங்கலடி வீதியின் புனர் நிர்மாணத்திற்கும் வழங்கப்படவுள்ளது. அவற்றிற்கான நிதி உடன்படிக்கைகள் 2015 ஆம் ஆண்டளவில் கைச்சாத்திடப்படவுள்ளன.

## வினைத்திறனான போக்குவரத்தின் ஊடாக பிராந்திய அபிவிருத்தியினை நோக்கி


பொருளாதார அபிவிருத்தி, வர்த்தகம், பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் தொழில் உருவாக்கம் உள்ளடங்கலாக பிரதான முற்தேவைகளுள் ஒன்றாக வினைத்திறனான போக்குவரத்து முறைமையின் விருத்தியானது இக்காலத்திற்குரிய ஒரு தேவை என்பதை அரசாங்கம் இனங்கண்டுள்ளது. அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிக்கு பங்களிப்புச் செலுத்தும் நோக்குடன் தேசிய வீதி வலையமைப்பிலுள்ள மிகப் பழைய ஒடுக்கமான பாலங்களை விசாலப்படுத்துவதற்கும், புனர் நிர்மாணம் செய்வதற்கும் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதி ஐ.அ.டொ 10 மில்லியன் வழங்குவதன் மூலம் பங்களிப்புச் செலுத்தியுள்ளது. 65 பாலங்களை புனர் நிர்மாணம் செய்வதற்காக நிதி செலுத்தப்பட்டுள்ளதோடு, இது வரை 37 பாலங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டில், பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியினால் 25 பாலங்களின் புனர் நிர்மாணம் செய்வதற்காக ஐ.அ.டொ. 35 மில்லியன்களை வழங்கியுள்ளதோடு, இக்கருத்திட்டமானது சப்ரகமுவா மாகாணத்தில் 9 பாலங்கள், மேல் மாகாணத்திலும் வட மேல் மாகாணத்திலும் 5 பாலங்கள், தென் மாகாணத்திலும் வட மாகாணத்திலும் 2 பாலங்களும், கிழக்கு மாகாணத்திலும், மத்திய மாகாணத்திலும் ஒரு பாலமும் உள்ளடங்கலாக மூன்று பொதிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.







### பதுளையிலிருந்து செங்கலடி வரை ஏ 5 வீதியின் தாழ்வாரத்தின் புனர் நிர்மாணம்




பேராதனை – பதுளை – செங்கலடி வீதி உல்லாசப் பிரயாணிகளைக் கவரக் கூடிய ஊவா மாகாணத்தின் ஊடாக கிழக்கு மாகாணத்திலிருந்து மத்திய மாகாணம் வரை இணைக்கப்படும் பிரதான நெடுஞ்சாலைகளில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது. பேராதனையிலிருந்து பதுளை வரையிலான இவ்வீதிப் பிரிவின் தாழ்வாரம் ஏற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதோடு, பதுளையிலிருந்து செங்கலடி வரையிலான 151.1 கி மீ. வீதி மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திப் பங்கேற்பாளரின் மூலம் நிதி வழங்கப்படல் வேண்டும். இக்கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ஐ.அ.டொ 140 மில்லியன்களாக. உள்ளதோடு, சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி ஐ.அ.டொ 60 மில்லியன்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதோடு, எஞ்சிய நிதித் தொகை அபிவிருத்திக்கான சவூதி நிதியினாலும், இலங்கை அரசாங்கத்தினாலும் வழங்கப்படல் வேண்டும்.

**மத்திய கிழக்குப் பிராந்தியத்திலிருந்தான நன்கொடை உதவி**

2014 இல் மத்திய கிழக்குப் பிராந்தியத்திலிருந்தான நன்கொடை உதவி குறிப்பிடத்தக்கதாக உள்ளதோடு, நிதியானது மன்னார், முல்லைத்தீவு. மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள நிலையாக உள்நாட்டில் இடம் பெயர்ந்நத மக்களுக்கான வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.



பஹ்ரைன் அரசாங்கம்
ஐ.அ.டொ 1.1 மில்லியன்



கஸகஸ்தான் அரசாங்கம்
ஐ.அ.டொ 0.2 மில்லியன்



ஓமான் அரசாங்கம்
ஐ.அ.டொ 1.0 மில்லியன்

**பேச்சு வார்த்தைகள் இடம் பெற்று வரும் கருத்திட்டங்கள்**

1
- பதுளை - செங்கலடி வீதியை விசாலப்படுத்தலும், விருத்தி செய்தலும் -
  - கடன் தொகை ஐ.அ.டொ 60 மில்லியன்
  - சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியுடன் இலங்கை அரசாங்கத்தின் இணை நிதி

2
- குருநாகலை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஏற்றுமதி விவசாயத்தினையும், பாற்பண்ணைத் துறையினை விருத்தி செய்வதன் ஊடாக ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி
- கடன் தொகை ஐ.அ.டொ 25 மில்லியன்

3
- பல்கலைக்கழக நகரமயமாக்கக் கருத்திட்டம் (வயம்ப பல்கலைக்கழகம்)
- கடன் தொகை ஐ.அ.டொ 30 மில்லியன்)


4
- மகாவலி இடது கரை அபிவிருத்திக் கருத்திட்டம் (கந்தளாய் மற்றும் கிண்ணியா)
- கடன் தொகை ஐ.அ.டொ 60 மில்லியன்)

5
- பொலன்னறுவை கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம்.
- கடன் தொகை ஐ.அ.டொ 420 மில்லியன்


## பகிர்வுகள்

2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் மத்திய கிழக்கின் நிதி உதவியிலிருந்தான மொத்தப் பகிர்வுகள் ஐ.அ.டொ 27.45 மில்லியன்களாகும். அத்தொகையில் 78.91 சதவீதம் வீதி அபிவிருத்தித் துறைக்கு பகிரப்பட்டுள்ளது.

**துறை வாரியான பகிர்வுகள் (ஐஅடொ மில்லியன்)**



**பகிர்வுகள் (ஐ.அ.டொ மில்லியன்)**




## விஷேட நிகழ்வுகள்

ஈராக் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் வரவு செலவுத்திட்டத் தயாரிப்பில் இலங்கையின் அனுபவம் தொடர்பான செயலமர்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஈராக்கின் தூதுவர் குழு ஈராக்கின் இலங்கை அரசாங்கத்தின் விவசாயப் பிரதி அமைச்சர் கலாநிதி காதி சாடி ரேகானினால் தலைமை வகிக்கப்பட்டது. ஈராக் அரசாங்கத்தின் நிதி நிபுணர்களின் குழாமொன்றும், திணைக்களங்களின் தலைவர்களும் ஈராக் சார்பாக செயலமர்வில் பங்கேற்றதோடு, நிதி அமைச்சின் உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக உள்ளடக்கப்பட்டனர்.

# தென்னாசியா

# இந்தியா


இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்கு நான்கு தசாப்தங்களுக்கும் மேலான வரலாறு ஒன்று காணப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கான இந்தியாவின் உதவி, 2008 ஆம் ஆம் ஆண்டின் பின்னா் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. 2008 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவினால் அர்ப்பணிக்கப்பட்ட மொத்த உதவி ஐ.அ.டொ 1,576 மில்லியன்களாகும். அத்தொகையில் ஐ.அ.டொ 1,250 மில்லியன் கடன்களாக வழங்கப்பட்டுள்ளதோடு, ஐ.அ.டொ 326 மில்லியன் நன்கொடைகளாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

கடன் உதவியானது இந்திய எக்சிம் வங்கியினால் வழங்கப்பட்ட அதே வேளை, நன்கொடை உதவியானது விஷேட கருத்திட்டங்கள் மற்றும் சிறிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆகியனவற்றின் ஊடாக இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது. தற்போது இந்தியா அபிவிருத்தி உதவி பிரதானமாக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார அபிவிருத்தி, கல்வி, சுகாதாரப் பராமரிப்பு, இயலளவுக் கட்டமைப்பு, பொருளாாரப் புத்துயிரூட்டல், போன்றனவற்றின் விருத்தியையே மையமாகக் கொண்டு பாய்ச்சப்படுகின்றது.

## 2014 இன் அர்ப்பணிப்புக்கள்

2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் இந்தியா அரசாங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் மற்றும், பொறியியல் பீடங்களின் வசதிகளை விருத்தி செய்வதற்காக ஐ.அ.டொ 600 மில்லியன்களை வழங்குவதற்கு அர்ப்பணிப்புச் செய்துள்ளது. அதன் பிரகாரம், புரிந்துணர்வு உடன்படிக்கை 2014 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டது.

**2008 - 2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் துறை வாரியான அர்ப்பணிப்புக்கள்**





## 2014 இன் பகிர்வுகள்

2014 ஆம் ஆண்டிற்கான மொத்தப் பகிர்வு ஐ.அ.டொ 142.86 மில்லியன்களைப் பதிவு செய்துள்ளது. அம்மொத்தப் பகிர்வில், ஐ.அ.டொ 106.4 மில்லியன் பிரதானமாக, ஓமந்தை – பள்ளை, மதவாச்சி – மடு, மடு – தலை மன்னார் வரையிலான புகையிரத வீதிகளைத் தரமுயர்த்தல், வடக்குப் புகையிரத சேவைகளின் சமிக்ஞையிடலும் தொடர்பாடல் முறைகள், மற்றும் பாரிய தம்புள்ளை நீர் வழங்கல் கருத்திட்டம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான கடன்களுக்கு பகிரப்பட்டுள்ளன.

மற்றுமொரு ஐ.அ.டொ 24.20 மில்லியன் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 49,000 வீடமைப்பு அலகுகளை மீள நிர்மாணிப்பதற்காக பகிரப்பட்டுள்ளது. இந்நிதியானது இலங்கை அரசாங்கத்துக்கு நன்கொடை நிதியாகச் செலுத்தப்பட்டுள்ளது.

**பகிர்வுகள் (ஐஅடொ மில்லியன்)**




அச்சுவேலி கைத்தொழில் பேட்டை
துரையப்பா விளையாட்டரங்கின் புனாரமைப்பு
வட மாகாணத்தில் 41,000 வீடமைப்பு அலகுகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்க ழகத்தின் விவசாய, பொறியியல், பீடங்களுக்கான வசதிகளை வழங்கல்
வடக்குப் புகையிரதப் பாதையின் புனரமைப்பு
- ஓமந்தை – காங்கேசன்துறை
- மதவாச்சி – தலை மன்னார்
வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 200 கட்டில் வாட்டுத் தொகுதியின் நிர்மாணம்
பாரிய தம்புள்ளை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மூலம் பயனடைந்த பிரதேசம்
கிழக்கு மாகாணத்தில் 5,000 வீடுகள்
ஹட்டன் டிக்கோயா 150 படுக்கைகளைக் கொண்ட அடிப்படை வைத்தியசாலையின் நிர்மாணம்
ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் 4,000 வீடுகள்
தெற்குப் புகையிரத வீதியின் மேம்படுத்துகை
கவனதிஸ்ஸபுர கைத்தொழில் வலயம், அம்பாந்தோட்டை
றுகுணுப் பல்கலைக்கழகத்தின் நவீன கலையரங்கத்தின் நிர்மாணம்
Kankesanthurai
Jaffna
Kilinochchi
Talaimannar
Omanthei
Madu
Vavunia
Madawachchi
Trincomalee
Wilpattu National Park
Puttalam
Anuradhapura
Somawathie Chaitya Sanctuary
Wasgamuwa National Park
Batticaloa
Knuckles Forest Reserve
Kandy
Gal Oya National Park
Victoria Randenigala Rantembe Sanctuary
Nuwara Eliya
Badulla
Colombo
Hatton
Horton Plains National Park
Horana
Avissawella
Yala National Park
Udawalawe National Park
Kalutara
Sinharaja Forest Reserve
Hambantota
Matara

### வடக்குப் புகையிரத வீதியின் மீட்பு

வடக்கு புகையிரத சேவைகளின் மீட்பானது வடக்குப் பிரதேசத்தினை நாட்டின் ஏனைய பாகங்களுடன் இணைப்பதில் மிக முக்கிய காரணிகளுள் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது. 3 தசாப்த மோதலின் பின்னர் 2010 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் வடக்குப் புகையிரத வலையமைப்பு முழுதையும் புனர் நிர்மாணம் செய்வதற்கு இந்தியாவின் எக்சிம் வவங்கியின் ஊடாக இந்திய அரசாங்கத்திடமிருந்து கடன் வசதியளிப்பொன்றைப் பெற்றுக் கொண்டது.

எனவே, மதவாச்சி – மடு மடு – தலை மன்னார், ஓமந்தை – பள்ளை, பள்ளை - காங்கேசன்துறை வரையிலான புகையிரத வீதியைப் (56 கிமீ) புனரமைப்பதற்கும் ஐ.அ.டொ 416.39 மில்லியன்களுக்கு கடன் வரிசையொன்றுக்குக் கைச்சாத்திடப்பட்டது. அந்தப் புகையிரத வீதியின் மொத்த நீளம் 196 கி மீற்றர்களாகும். ஐ.அ.டொ 382.37 மில்லியன் பெறுமதியான மற்றுமொரு கடன் வரிசை பள்ளையிலிருந்து காங்கேசன்துறை வரையிலான புகையிரத வீதியைப் (56 கிமீ) புனரமைப்பதற்கும் மற்றும் வடக்குப் புகையிரத வீதி வலையமைப்பின் சமிக்ஞை இடலுக்குமாக 2012 இல் கைச்சாத்திடப்பட்டது. சுகல புனருத்தாரண வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, தற்போது செயற்பாட்டுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான்

பாகிஸ்தானும், இந்தியாவும் தென்னாசியப் பிராந்தியத்தில் அமைந்துள்ள இரண்டு நாடுகளாக உள்ளதோடு, இலங்கை பாகிஸ்தானிடமிருந்து கடன் மற்றும் நன்கொடைகள் வடிவில் உதவியினைப் பெற்றுக் கொண்டுள்ளது. இலங்கை பாகிஸ்தானிடமிருந்து பெற்றுக் கொண்ட முதலாவது நிதி உதவி, 1991 ஆம் ஆண்டில் புகையிரதப் பெட்டிகளுக்காகப் பெற்றுக் கொண்ட ஐ.அ.டொ 5 மில்லியன்களாகும்.

2011 ஆம் ஆண்டில் கம்பஹா மாவட்டத்தின் பாபுஸ் ஸலாம் மகா வித்தியாலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக பாகிஸ்தான் அரசாங்கம் ஐ.அ.டொ 125,000 பெறுமதியான நன்கொடை உதவியினையும் மற்றும் 2012 ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தின் அல்/ அக்ஸா மகா வித்தியாலயத்தின் நிர்மாண வேலைக்காக ஐ.அ.டொ 90,000 தொகை பெறுமதியான நன்கொடை உதவியையும் வழங்கியுள்ளது.

2013 ஆம் ஆண்டில், கம்பஹா மாவட்டத்தின் திவுலப்பிட்டியவில் உள்ள கைத்தறித் துறைக்கு ஆதரவளிப்பதற்காக ஐ.அ.டொ 72,000 நன்கொடையை வழங்குவதன் மூலம் பாகிஸ்தானிடமிருந்து உதவி மேலும் நீடிக்கப்பட்டது. சுய ஜீவன கைத்தறி நிறுவுகைகள் இப்பிரதேசத்திலுள்ள 75 பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

பாகிஸ்தான் அரசாங்கம் 2014 ஆம் ஆண்டில் பின்வரும் கருத்திட்டங்களுக்கு நன்கொடை உதவிகளை வழங்கியுள்ளது.

| கருத்திட்டம் | தொகை ஐஅடொ மில்லியன் |
|---|---|
| மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 1,000,000 |
| வவுனியா அல்/ அக்ஸா மகா வித்தியாலய பாடசாலைக் கட்டடத்தில் மேலதிக இரண்டு மாடிகளை நிர்மாணித்தல் | 30,000 |
| கண்டி , அக்குறணை சியா ஆஸ்பத்திரியின் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளைப் பலப்படுத்தல். | 17,000 |
| கண்டி பதியுத்தீன் மஹ்மூத் மகளிர் பாடசாலைக்கான உதவி | 6,500 |

# ரஷ்யா, அவுஸ்திரேலியா, மேற்குப் பிரிவு


இலங்கைக்கான மேற்கு அரைக்கோளத்திலுள்ள நாடுகளிலிருந்தான நிதி உதவியானது, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் முன்னேற்றப் பொருளாதாரப் பிரிவின் ஊடாகத் திரட்டப்படுகின்றது. இலங்கைக்கு நிதி உதவியை வழங்கும் பிரதான கடன் வழங்குவோராக ஜேர்மன், நெதர்லாந்து, சுவீடன், ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஸ்பெய்ன், ஒஸ்ட்ரியா, டென்மார்க், பெல்ஜியம் ரஷ்யா, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், மற்றும் ஹங்கேரி போன்ற இன்னோரன்ன நாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2010 ஆம் ஆண்டில் இலங்கை நடுத்தர வருமான மட்டத்திலான பொருளாதார நிலைமைக்கு தரமுயர்த்தப்பட்டதனால் மேலைத் தேய நாடுகளிலிருந்தும், கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்தும் வெளிநாட்டு நிதி வடிவத்தில் கிடைக்கப் பெற்ற உதவியும் அதன் சேர்க்கையும், கணிசமான அளவில் மாற்றமடைந்தது. சலுகை அடிப்படையிலான நிதி அல்லது குறைந்த வட்டி வீதத்துடனான மென் கடன்களின் வீழ்ச்சியின் காரணமாக இந்நாடுகளிலிருந்தும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்ற அபிவிருத்தி உதவி சலுகை அடிப்படையிலல்லாத மற்றும் சலுகை அடிப்படையிலான கடன்களின் கலவை மற்றும் ஏற்றுமதிக் கடன் வசதியளிப்புக்கள் போன்றனவற்றை நோக்கி மாறுபட்டுள்ளது.

இந்நிதியானது விசேடமாக i.ஏற்றுமதிக் கடன்கள் ii. வர்த்தகக் கடன்கள் iii. மரபு ரீதியான கடன் உதவி iv. நன்கொடை போன்ற இன்னோரன்ன வடிவங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஏற்றுமதிக் கடன்களின் கீழான வெளிநாட்டு உதவியானது, அடிப்படையில் போதிய அளவிலான பொருளாதா நன்மைகளை உருவாக்கக் கூடிய வர்த்தக ரீதியான சாத்தியமான கருத்திட்டங்களில் அல்லது கடன் மீள் கொடுப்பனவுகளை உள்ளடக்குவதற்கான காசுப்பாய்ச்சல்களில் முதலிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மேலைத் தேய நாடுகளிலிருந்தான அநேகமான வர்த்தக ரீதியான கடன் பெறுகைகள், வீதிகளும், பாலங்களும், மருத்துமனைகளின் அபிவிருத்தி, மக்களுக்குத் தரமான, உயர் தொழில் நுட்பத்திலான, நம்பகமான சுகாதார வசதிகளை வழங்கும் நோக்குடன் சுகாதாரப் பராமரிப்பு வசதிகளின் விருத்தி போன்ற நீர் வழங்கல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு, போன்ற அவசரமானதும், முன்னுரிமை அளிக்கப்பட்டதுமான அபிவிருத்திக் கருத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும்

**முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலிருந்தான வெளிநாட்டு நிதியின் அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும் 2005 - 2014 (ஐஅடொ மில்லியன்)**




| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அர்ப்பணிப்புக்கள் | 513.0 | 398.5 | 337.0 | 439.0 | 138.0 | 547.2 | 124.0 | 234.0 | 487.5 | 370.0 | **3476** |
| பகிர்வுகள் | 193.0 | 283.0 | 264.0 | 313.0 | 295.0 | 361.0 | 202.0 | 223.0 | 312.4 | 246.3 | **2573** |

## 2014 இல் வெளிநாட்டு நிதியீட்டின் அர்ப்பணிப்புக்கள்

மேலைத்தேய நாடுகளிலிருந்தான வர்த்தக, ஏற்றுமதிக் கடன் வசதியளிப்புக்கள் அதே போல நன்கொடை உதவி ஆகியனவற்றின் கீழான பின்வரும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் நிதி ஏற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டன.

**2014 இல் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்புக்கள்**

| அபிவிருத்திப் பங்காளர் | கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|---|
| டச் பேங்க் ஏஜீ | 537 கிராமியப் பாலங்களின் நிர்மாணக் கருத்திட்டம் | 150.0 |
| ஏஎப்டீ – பிரான்ஸ் | அம்பத்தளை நீர் வழங்கல் கருத்திட்டம் | 70.0 |
| பெல்ஜியம் கேபீசீ வங்கி | மொனராகலை – புத்தளை நீர் வழங்கல் கருத்திட்டம் | 13.6 |
| ஈஎப்ஐஜ சீ உத்தரவாதத்துடன் நெதர்லாந்து ரபோ வங்கி | 2500 பாற்பண்ணை கால்நடைகளின் இறக்குமதிக் கருத்திட்டம் | 20.7 |
| ஜேர்மனி அரசாங்கம் | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் | 2.1 |
| ஜேர்மனி அரசாங்கம் | சமூக பிணைப்பு மற்றும் நிலை மாற்றத்திற்கான முன்னெடுப்புக்களுக்கு வசதியளித்தல்( FLICT) | 2.6 |
| நெதர்லாந்து ரபோ வங்கி | 463 கிராமியப் பாலங்களின் நிர்மாணக் கருத்திட்டம் | 110.6 |
| | **மொத்தம்** | **369.76** |

## 2014 இல் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

**2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் மேலைத்தேய நாடுகளின் கடன் உதவியின் கீழ் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதான கருத்திட்டங்கள் பின்வருமாறு:.**

| அபிவிருத்திப் பங்காளர் | கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|---|
| அவுஸ்திரேலியா ஏற்றுமதி நிதிக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் (EFIC) நெதர்லாந்து ரபோ வங்கியும் | 20,000 கால்நடைகளின் இறக்குமதி | 73.0 |
| அவுஸ்திரேலியா ஏற்றுமதி நிதிக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் (EFIC) அவுஸ்திரேலிய ஏஎன்இஸட் வங்கியும் | அம்பாறை நீர் வழங்கல் கருத்திட்டம் – கட்டம் III (மேலதிக நிதியீடு) | 7.5 |
| கிரெடிட் எக்ரிகோல் வங்கி – பிரான்ஸ் | பாரிய மாத்தளை நீர் வழங்கல் திட்டம் | 130.7 |
| ஸ்பெய்ன் அரசாங்கமும், ஸ்பெய்ன் பீபீவீ வங்கியும் | ராஜகிரிய, பொல்கஹவலை மற்றும் கனேமுல்லை பிரதேசங்களில் மேம்பாலங்களின் நிர்மாணம் | 49.0 |
| ஏஜென்ஸ் பிரன்சைஸ் டீ டிவலப்மன்ட் (AFD) | 4 உப நிலையங்களின் நிர்மாணம் | 32.0 |
| ஏஜென்ஸ் பிரன்சைஸ் டீ டிவலப்மன்ட் (AFD) | பச்சை சக்தி அபிவிருத்தியும், வலு வினைத்திறன் விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் | 23.0 |

| அபிவிருத்திப் பங்காளர் | கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|---|
| ஸ்பெய்ன் அரசாங்கம் | ஆனமடுவை நீர் வழங்கல் கருத்திட்டம் | 32.0 |
| ஹொங்கொங் சாங்ஹாய் பேங்கிங் கோப்பரேசன் லிமிட்டட் மற்றும் எச்எஸ்பீசீ கொழும்புக் கிளை | அம்பாந்தோட்டையின் கலாமெட்டியவிலுள்ள ஓசன் பல்கலைக்கழகத்திற்கு புதிய கட்டடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல் | 82.4 |
| ஹொங்கொங் சாங்ஹாய் பேங்கிங் கோப்பரேசன் லிமிட்டட் மற்றும் எச்எஸ்பீசீ கொழும்புக் கிளை | புதிய பாற் தொழிற்சாலையை பதல கமயில் மீள அமைத்தல் | 78.4 |
| ரபோ வங்கி – நெதர்லாந்து | இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கு 4000 கன மீற்றருள்ள நீரிற்குக் கீழேயுள்ள சேற்றை அகழ்வதற்கான இயந்திரம் ஒன்றை வழங்கல் | 39.6 |
| ரபோ வங்கி – நெதர்லாந்து | விஷேட தாய்மார் மற்றும் சிறுவர் வைத்தியசாலையாக பெலியத்தை மாவட்ட வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல் | 30.4 |
| | **மொத்தம்** | **497.5** |

# 2014 இல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பிரதான கருத்திட்டங்கள்

## மொனராகலை–புத்தளை நீர் வழங்கல் கருத்திட்டம்

43.5 சதவீதமான தேசிய குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கத்துடன் ஒப்பிடுகையில் மொனராகலை மாவட்டத்தின் குழாய் நீர் வழங்கல் 20 சதவீத அளவினையே உள்ளடக்குகின்றது. இம்மாவட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் குடி நீர் வழங்கல் பிரேரணைத் திட்டங்களுக்கிடையில் மொனராகலை – புத்தளை ஆகிய நகரங்கள் உள்ளடங்கக் கூடிய வகையில் தொடர்ச்சியான நீர் வழங்கலொன்றை பெற்றுக் கொடுக்க முடியாதுள்ளதோடு, அது மடுல்லை ஒக்கம்பிட்டிய போன்ற நகர்ப்புற பிரதேசங்களின் குடி நீர்த்தேவையை உள்ளடக்கக் கூடிய அளவிற்கு போதியதாக இல்லை. முன் மொழியப்பட்டுள்ள மொனராகலை – புத்தளை நீர் வழங்கல் பிரேரணைத் திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு 6000 கன மீற்றர் கொள்ளளவொன்றுடனான நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிர்மாணித்தலும், கிராம அலுவலர் பிரிவுகள் நான்கினை உள்ளடக்கி 110 கிலோ மீற்றர் நீரை விநியோகிக்கும் வலையமைப்பு நிர்மாணிக்கப்படும். அதன் மூலம் இப்பிரதேசத்தில் வாழும் 500,000 குடும்பங்கள் வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளுக்கும் குழாய் வழியிலான குடி நீரை வழங்க முடிகின்றது. மொனராகலை – புத்தளை நீர் வழங்கல் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக பெல்ஜியம் கேபீசீ வங்கியின் கீழ் யூரோ 12.9 மில்லியன்களையும், ஹட்டன் நெஷனல் வங்கியின் கீழ் யூரோ 8.98 மில்லியன் கடன் உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## 1000 கிராமிய பாலங்களின் நிர்மாணம்

நெடுந்தொலைவிலுள்ள கிராமங்களுக்கும் தேசிய மட்டத்திலான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பயன்களை உச்ச அளவிற்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் நாட்டிற்குள் வீதி இணைப்புக்களை விருத்தி செய்வதற்காக அரசாங்கம் உயர் முன்னுரிமையொன்றிற்கு ஏற்ப 1000 கிராமியப் பாலங்களை நிர்மாணிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தினால் லண்டனில் டொயிஷ் வங்கியுடனும், மற்றும் நெதர்லாந்தின் ரபோ வங்கியுடனும் உட்டன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் அநேகமான பின் தங்கிய கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் சந்தை கல்வி, சுகாதார வசதிகள் போன்ற வசதிகளுக்காக கிராமிய மக்களுக்குள்ள அடைவுகளை உயர்வடையச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## பாற்பண்ணைக் கால்நடைகளின் இறக்குமதி

உள்ளூர் திரவப்பால் கைத்தொழில் சுற்றுப்புறச் சூழலுக்கு சேதங்கள் விளைவிக்காது உற்பத்தி சந்தைப்படுத்தல் சங்கிலியில் சகல பங்காளர்களுக்கும் நியாயமான இலாப எல்லையை வைத்திருக்கும் அதே வேளை, தாங்கக் கூடிய விலைகளில் தற்போதுள்ள சந்தைகளுக்கு கணிசமான அளவிலான தரமான பால் உற்பத்திபொருட்களை உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு உள்ளது. ஆயினும், நாட்டில் தரமான பாற்பண்ணைக் கால்நடைகளின் கடும் பற்றாக்குறையானது இலங்கையில் பாற்பண்ணைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்குத் தடையாக உள்ளது. கால்நடைகளின் இருப்பைத் தரமுயர்த்துவதற்கு சிறந்த இனப்பெருக்கக் கால்நடைகளைப் பெற்றுக் கொள்வதும் சிரமமாக உள்ளது.

எனவே, முன் மொழியப்பட்டுள்ள இக்கருத்திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியாவிலிருந்து 2,500 பாற்பண்ணைக் கால்நடைகளை இறக்குமதி செய்தலானது, உள்ளூர் சந்தைக்கான கணிசமான அளவிலான தரமான பாலினதும் பால் உற்பத்திகளினதும் உற்பத்திப் பொருட்களை உறுதிப்படுத்தும். அதே போல தெற்குப் பிராந்தியத்தின் பாற்பண்ணைகளின் இனப் பெருக்கத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் இக்கருத்திட்டத்தின் கீழ் ரிதியகமை பண்ணை அபிவிருத்தி செய்யப்படும்.

இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் திரவப்பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பால் உற்பத்திப் பொருட்களுக்காக நாட்டுக்கு வெளியே எடுத்துச் செல்லப்படும் அந்நியச் செலாவணியை சேமித்துக் கொள்வதும் இதன் நோக்கமாகும். இந்த முன் மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தின் மூலம் பாரிய அளவிலான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுவதோடு, அது கிராமிய வறுமையையும், போசாக்கின்மையையும் குறைப்பதில் பாரிய அளவு பங்களிப்புச் செலுத்தும்.

# ஐக்கிய நாடுகள் நிறுவனங்களும், தொழில்நுட்ப உதவிப் பிரிவும்

## ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள்

1952 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை பிரதானமாக விவசாயம், கடற்றொழில், சுற்றாடல், சுகாதாரம், கல்வி, வாழ்வாதார அபிவிருத்தி, அனர்த்த நிவாரணம் போன்ற இன்னோரன்ன துறைகளில் உள்ள பல்வேறுபட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP), உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதி (UNICEF), உலக உணவு அமைப்பு (WFP), ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதி (UNFPA), ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் (UNHCR), உலக சுகாதார அமைப்பு (WHO), ஐக்கிய நாடுகள் குடியிருப்புக்கள் (UN Habitat), சர்வதேச தொழில் அமைப்பு (ILO), விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி (IFAD) போன்ற இன்னோரன்ன ஐக்கிய நாடுகள் நிறுவனங்களிடமிருந்து குறிப்பிடத்தக்க அளவிலான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள், இலங்கை அரசாங்கத்தினாலும் மற்றும் ஐக்கிய நாடுகள் நிறுவனங்களினாலும் ஒன்றிணைந்து இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவி வேலைச்சட்டகத்தின் ஊடாக அதன் உதவியை நிலைப்படுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் தற்போதைய வேலைச்சட்டகத்தின் கீழ், 2013 ஆண்டு தொடக்கம் ஐந்தாண்டு காலப்பிரிவில் அண்ணளவாக ஐ.அ.டொ 405 மில்லியன் வரை உயர்த்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் பிரதானமாக நன்கொடைகள் வடிவில் கிடைக்கின்றது. ஆயினும், விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி நன்கொடைகளின் ஊடாக மாத்திரமன்றி கடன்களின் ஊடாகவும் வெளிநாட்டு நிதியை வழங்குகின்றது.

### அர்ப்பணிப்புக்கள்

2014 இல் இலங்கை அரசாங்கத்திற்கும், ஐக்கிய நாடுகள் நிறுவனங்களுக்கும் இடையில் பின்வரும் பிரதான கருத்திட்டங்கள் கைச்சாத்திடப்பட்டன.


| நிறுவனம் | கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|---|
| ஐநாஅநி (UNDP) | 2014 – 2018 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கான முழுமையான அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | 2.04 |
| | இலங்கையில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படக் கூடிய பின் இடர்பாடுகளை மீட்டலும், அபிவிருத்தி செய்தலும் | 3.12 |
| உவிஅ (FAO) | உணவுப் பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்கு கொய்னா (Quinoa) எனப்படும் பயிரினை அறிமுகப்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்கல் | 0.12 |
| | சார்க் நாடுகளில் தோட்டக்கலைச் சங்கிலியில் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தல் | 0.49 |
| | பாற்பண்ணைக் கால்நடைகளுக்குப் பொருத்தமான உணவூட்டும் தொழில்நுட்பங்களை மேம்படுத்தல் | 0.27 |
| | இலங்கையில் கொடுவா மீன் நீரியல் வளத்தினை விருத்தி செய்தல் | 0.34 |
| உஉநி (WFP) | நீடித்த நிவாரணமும் மீட்புச் செயற்பாடுகளும் (PRRO) | 23.48 |

மேலே குறிப்பிடப்பட்டவைகளுக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவி வேலைச்சட்டகத்திற்கு ஏற்ப, 2013–2017 ஆண்டு காலப்பிரிவிற்கான நாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திட்டத்தின் கீழ் முறையே ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதி மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதி ஆகியன ஐ.அ.டொ 60 மில்லியன், ஐ.அ.டொ 60 மில்லியன் மற்றும் ஐ.அ.டொ 12 மில்லியன்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன.

## பகிர்வுகள்

பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளது போல, மொத்தப் பகிர்வின் பிரதான பங்கு விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியின் உதவியுடன் விஷேடமாக பெருந்தோட்டம், கடற்றொழில், மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களே அறிக்கையிட்டன.

**2014 இல் பகிர்வுகளின் சதவீதம்**




## 2014 இல் பூர்த்தி செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

விவசாயம், கடற்றொழில், வாழ்வாதார அபிவிருத்தி, சுற்றாடல், போன்ற இன்னோரன்ன துறைகளில்லான பின்வரும் பிரதான கருத்திட்டங்கள் 2014இல் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| நிறுவனம் | கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|---|
| **நன்கொடை** | | |
| உவிநி FAO | கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களில் ஒன்றிணைக்கப்பட்ட நீர்ப்பாசன மற்றம் விவசாய வாழ்வாதார அபிவிருத்தி | 5.10 |
| ஐநாஅறி UNDP | ஓசோன் படலத்தினை பாதுகாப்பதற்கான நிறுவன ரீதியான பலப்படுத்தலை மேற்கொள்ளல் (கட்டம் – IX) | 0.13 |

# தொழில்நுட்ப உதவி

நாட்டின் எதிர்கால அபிவிருத்திச் செயற்திட்டமானது பிரதானமாக அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதனையே மையமாகக் கொண்டுள்ளது. இவ்விலக்கினை அடைவதற்கு மனித வளங்களின் தொடர்ச்சியான அபிவிருத்தியும், அரச துறையின் இயலளவைக் கட்டியெழுப்பலும் மிக முக்கியமானதாக உள்ளது. அதன் பிரகாரம், வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களுக்கு இலங்கையின் தேசிய குவி மையப் புள்ளியாக விளங்கும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் காலத்துக்குக் காலம் அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான், கொரியா, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, இந்தொனேசியா, போன்ற இரு தரப்பு அபிவிருத்திப் பங்காளர்கள், மற்றும் ஆசியா அபிவிருத்தி வங்கி, கொழும்புத் திட்டம், உலக வங்கி, பொதுநலவாயச் செயலகம் போன்ற பல் தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு வருவதோடு, அவ்வபிவிருத்திப் பங்காளர்களுடன் உறுதியான உறவினையும் பேணி வருகின்றது.

இலங்கை அரசாங்கம் 15 இற்கும் அதிகமான அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து வருடாந்தம் சுமார் 600 வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை நீண்ட கால ( 8 மாதங்களும், 8 மாதங்களை விட அதிகமானவைகளும்) மற்றும் குறுகிய கால வடிவில் பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்கின்றது. அதன் பிரகாரம், 2014 ஆம் ஆண்டில் மொத்தம் 1,086 பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டதோடு, அவற்றில் 71 நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களாகவும், எஞ்சியவை குறுகிய கால பயிற்சி வாய்ப்புக்களாகவும் இருந்தன. பின்வரும் அட்டவணை 2014 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை இலங்கை அரசாங்கத்தினால் பெற்றுக் கொண்ட பயிற்சி வாய்ப்புக்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

**2014 இல் அபிவிருத்திப் பங்காளர்களினால் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள்**

| அபிவிருத்திப் பங்காளர் | குறுகிய காலம் | நீண்ட காலம் |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) | 64 | |
| கொழும்புத்திட்டம் | 11 | 1 |
| தொழில்நுட்ப உதவிக்கான பொதுநலவாயம் (CFTC) | 29 | |
| அவுஸ்திரேலியா | | 35 |
| சீனா | 453 | |
| மலேசியா | 9 | |
| சிங்கப்பூர் | 35 | 1 |
| தாய்லாந்து தாய்லாந்து | 26 | 8 |
| கொரியா | 199 | 9 |
| இந்தியா | 64 | |
| ஜப்பான் | 101 | 17 |
| சார்க் செயலகம் | 16 | |
| எகிப்து | 4 | |
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 3 | |
| உலக வங்கி | 1 | |
| **மொத்தம்** | **1,015** | **71** |

கடந்த சில ஆண்டு காலப்பிரிவுகளில், பயிற்சி வாய்ப்புக்களில் எதிர்பாராததும், முன்னெப்போதும் நிகழாததுமான விருத்தி காணப்பட்டது. உதாரணமாக, 2014 ஜனவரி மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை சீனாவில் வெளிநாட்டு அனுபவத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு 453 இற்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டதோடு, கூடியது ஒரு நிகழ்ச்சித் திட்டத்துக்கு 8 உத்தியோகத்தர்கள் வரை

தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 2014 இல் இலங்கைக்குக் கிடைக்கப் பெற்ற மொத்த பயிற்சி வாய்ப்புக்களில் சுமார் 42 சதவீதத்தினை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. சீன அரசாங்கம் இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரர்களையும் தெரிவு செய்வதற்கு இயன்ற வரை தனது முயற்சியினை எடுத்துள்ளது. அவுஸ்திரேலிய அரசாங்கமும் 2014 இற்கான தமது அவுஸ்திரேலிய அபிவிருத்திப் புலமைப்பரிசிலின் உட்சேர்ப்பினை சுகாதாரம் ,கல்வி, மற்றும் நிலையான பொருளாதார அபிவிருத்தி ஆகிய பரப்புகளில் அதிகரித்துள்ளதோடு, 2014 ஆம் ஆண்டில் 35 உத்தியோகத்தர்கள் முதுமாணிப்பட்டடிப்படிப்பினை மேற்கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்டனர். கொரியா அரசாங்கம், கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக 199 குறுகிய கால பயிற்சி வாய்ப்புக்களையும், 09 நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது. 2014 ஆம் ஆண்டில் இலங்கைக்குக் கிடைக்கப் பெற்ற மொத்தப் பயிற்சி வாய்ப்புக்களில் 16 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ஜப்பானிய அரசாங்கம் 118 பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியுள்ளதோடு, அவை குறுகிய கால மற்றும் நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களை உள்ளடக்கியுள்ளதோடு, அவை மொத்தப் பயிற்சி வாய்ப்புக்களில் 11 சதவீதத்தினையும் பதிவு செய்துள்ளது. அதே போல இந்திய அரசாங்கம், சிங்கப்பூர் அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றன 2014 இல் குறிப்பிடத்தக்க அளவிலான பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களை கருதும் போது, அநேகமான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் முதுமாணிப்பட்டப் பாடநெறிகள் கனிஷ்ட மற்றும் நடுத்தர மட்ட உத்தியோகத்தர்கள் அவர்களது எதிர்கால தொழில் அபிவிருத்திக்குத் தேவையான கல்வி ரீதியான மற்றும் உத்தியோகபூர்வ திறன்களை விருத்தி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலும், இப்பயிற்சிப் பாடநெறிகள் உலகில் உள்ள சிறந்த பிரதான பயிற்சி நிறுவனங்களினாலும், பல்கலைக்கழகங்களினாலும் நடாத்தப்படுகின்றன. இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் விவசாயம், கால்நடை, கடற்றொழில் நீர்ப்பாசனம், வீதி, போக்குவரத்து, சுகாதாரம், தொழில் முயற்சி அபிவிருத்தி, சூழல், கல்வி, பொது நிர்வாகமும், நல்லாட்சியும், அபிவிருத்தியும், அரச கொள்கையும் ஆகிய இன்னோரன்ன துறைகளை மையமாகக் கொண்டிருந்தது. தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக அபிவிருத்திப் பங்காளர்கள் அரச துறை உத்தியொகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள், ஆய்வுப் பயணங்கள் போன்றனவற்றையும் வழங்கின.

## தன்னார்வாளர் சேவை

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அப்பால் தொழில்நுட்ப உதவிப்பிரிவானது அபிவிருத்திப் பங்காளர்களுடனும், மற்றும் நிரல் அமைச்சுக்களுடனும் ஒன்றிணைந்து வெளிநாட்டு நிபுணர்கள் மற்றும் தன்னார்வாளர்களின் சேவைகளின் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்கின்றது. நிரல் அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களை அடிப்படையாகக் கொண்டு, பொருத்தமான நிபுணர்கள் மற்றும் தன்னார்வாளர்கள் இனங்காணப்படுவதோடு, அவர்களை வேலையில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும். 2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில், இலங்கை அரசாங்கம், கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், மற்றும் அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து தன்னார்வாளர்களைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு, அவை சுகாதாரம், சமூகவியல், சமூக அபிவிரத்தி, விளையாட்டுக்கள், கல்வி, மொழி, நெசவு மற்றும் தகவல் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் முறையே 51, 58 மற்றும் 02 தன்னார்வாளர்களின் சேவைகளைப் பெற்றுக் கொண்டுள்ளது.

# மூலதனச் சந்தைப் பிரிவு

அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளூர் வங்கிகளிடமிருந்து உள்நாட்டு நிதியினைத் திரட்டுவதற்கும், அரசுடமை நிறுவனங்களுக்கு மூலதனத்திற்கான சிறந்த அடைவிற்கு வசதியளித்தல், உள்நாட்டுப் படுகடன் மூலதனச் சந்தையைக் கண்காணித்தல், அரசிறைக் கடன் முறிகளின் மூலம் சந்தைகளை அடைவதற்கான வசதிகளை அளிப்பதற்கு சர்வதேச நிதிச் சந்தைகளைப் புரிந்து கொள்ளல் போன்றனவே மூலதனச் சந்தைப் பிரிவின் பிரதான கடமைகளாகும்.

## உள்ளூர் வங்கிகளிடமிருந்து நிதியினைத் திரட்டல்

64 வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்காக ரூபா 151.7 பில்லியன்கள் வரை உள்ளூர் வங்கிகளிலிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, 2014 ஆம் ஆண்டில், மூலதனச் சந்தைப் பிரிவின் மூலம் 22 முன்னுரிமை பெற்ற வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு ஏறக்குறைய ரூபா 33.4 பில்லியன்களை உள்ளூர் வங்கிகளிடமிருந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னுரிமை பெற்ற இவ்வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு- கட்டுநாயக்கா அதி வேகப்பாதைக் கருத்திட்டத்தின் செயற்பரப்பின் வேறுபாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி வசதிகளை வழங்குதல், வெளிவட்ட அதிவேகப்பாதைக் கருத்திட்டம் - கட்டம் III மற்றும் கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டிய (நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை சேவைகளுக்கான நிதியீடு) ஆகிய இன்னோரன்ன மூன்று வெளிநாட்டு நிதி உதவி வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான நிதியிட்டின் ஒரு பகுதிக்கு உள்ளூர் வங்கியிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ரூபா 29.1 பில்லியன் தொகை பெறுமதியான நீர் கருத்திட்டங்களுக்கு உள்ளூர் வங்கிகளை அணுகுவதற்கு 2013 இல் அங்கீகாரம் வழங்கப்பட்டதோடு. ரூபா 10.0 பில்லியன் தொகை பெறுமதியான மேலதிகமான 4 நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ரூபா 39.2 பில்லியன் தொகைக்கு உள்நாட்டு வங்கிகளுடன் 11 கடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம் உள்நாட்டு வங்கியின் நிதியினைப் பயன்படுத்துவதன் மூலம் தமது செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்காக எம் / எஸ் எவிக் இன்டர்நெஷனல் பீஜிங் கம்பனி லிமிட்டட்டிடமிருந்து (பெனாமெக்ஸ் பண்டங்களின் போக்குவரத்துக் கப்பல்கள் இரண்டினை) கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன் பிரகாரம், வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் ஐ.அ.டொ 70 மில்லியன் கடன் தொகையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் வங்கியுடன் கடன் உடன்படிக்கையொன்றினை மேற்கொண்டது. இக்கப்பல்கள், ஏற்கனவே உள்ள நுரைச்சோலை அனல் மின் நிலைய கட்டடம் I இற்கு மேலதிகமாக அடுத்த சில வருடங்களில நுரைச்சோலை அனல் மின் நிலைய கட்டடம் II இற்கும், சாம்பூர் அனல் மின் நிலையத்திற்கும் வழங்குவதற்குத் தேவையான நிலக்கரியை பாரிய அளவில் இறக்குமதி செய்வதற்கு இக்கப்பல்களைப் பளன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பிட்ட ஆண்டில், உள்ளூர் வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மொறட்டுவவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனத்தினை மீள அமைப்பதற்கும். அபிவிருத்தி செய்வதற்கும் உயர் கல்வி அமைச்சிற்கு அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டது. அதன் பிரகாரம், ரூபா 10.3 பில்லியன்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஒப்பந்ததாரரான இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்சன் கொன்சோடியம் நிறுவனத்தினால் வர்த்தக வங்கியுடனும், ஹட்டன் நெஷனல் வங்கியுடனும் இரண்டு கடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அக்கடன் நிதியை மீளச் செலுத்துவதனையும், மற்றும் வட்டி செலுத்துவதனையும் பாதுகாப்பதற்காக ஹட்டன் நெஷனல் வங்கிக்கு ஒதுக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றினை (Standby Letter of Credit) உயர் கல்வி அமைச்சினால் இலங்கை வங்கியில் திறக்கப்பட்ட, இவ்வொதுக்கப்பட்ட நாணயக் கடிதம் பாதுகாப்பதன் மூலம் வசதியளிக்கும் கடிதமொன்றினை (Letter of Comfort) திறைசேரியினால் இலங்கை வங்கிக்கு வழங்கப்படும். இக்கருத்திட்டம் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும் விஞ்ஞானிகளின் எண்ணிக்கையை உயர்வடையச் செய்வதன் மூலம் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களிலும் எதிர்கால அபிவிருத்தியுடன் தொடர்புடைய உதவியை வழங்குவதன் மூலம் தொழில்நுட்ப நிறுவனத்தினை மற்றுமொரு இடத்தில் ஸ்தாபிப்பது இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

இலங்கைக் காணிச் சீர்திருத்த அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால், 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் ரூபா 14.2 பில்லியன் செலவிலான வேரஸ் ஆற்றின் மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் கருத்திட்டத்திற்கு உள்ளூர் நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய சேமிப்பு வங்கியுடன் கடன் உடன்படிக்கையொன்றினை மேற்கொண்டுள்ளது.

**உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக அரசுடமை நிறுவனங்களுக்கு உள்ளூர் வங்கிகளிடமிருந்து கடன் வழங்கல்**

| அரசுடமை நிறுவனங்கள் | வங்கி | 31.12.2014 இல் மொத்த அர்ப்பணிப்புக்கள் ரூபா பில்லியன் | 31.12.2014 இல் மொத்தப் பகிர்வுகள் ரூபா பில்லியன் |
|---|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA) – முன்னுரிமை பெற்ற வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | இலங்கை வங்கி | 36.7 | 23.6 |
| | மக்கள் வங்கி | 14.6 | 13.6 |
| | தேசிய சேமிப்பு வங்கி | 51.4 | 21.3 |
| | ஹற்டன் நெஷனல் வங்கி | 32.2 | 12.0 |
| | இலங்கை வர்த்தக வங்கி | 7.2 | 4.5 |
| | டீஎப்சீசீ | 1.3 | 0.9 |
| | தேசிய அபிவிருத்தி வங்கி | 8.3 | 4.2 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை – கொழும்பு கட்டுநாயக்கா அதிவேகப்பாதைக் கருத்திட்டம் | மக்கள் வங்கி | ஐஅடொ 44.7 மில்லியன் | ஐஅடொ 21.3 மில்லியன் |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை – வெளிவட்ட அதிவேகப்பாதைக் கருத்திட்டம் | இலங்கை வங்கி | 1.8 | 0.2 |
| இலங்கைக் காணிச் சீர்திருத்த அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | தேசிய சேமிப்பு வங்கி | 14.2 | 1.6 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹற்டன் நெஷனல் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, வர்த்தக வங்கி | 18.0 | 1.5 |
| வர்த்தக முகாமைத்துவத்திற்கான தேசிய பாடசாலை | இலங்கை வங்கி | 8.6 | 2.9 |
| கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம | தேசிய சேமிப்பு வங்கி | ஐஅடொ 201.6 மில்லியன் | ரூபா. 3.16 பில்லியன் + ஐஅடொ 76.59 மில்லியன் |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் | மக்கள் வங்கி | ஐஅடொ 70.0 மில்லியன் | ஐஅடொ 35.0 மில்லியன் |
| உயர் கல்வி அமைச்சு | வர்த்தக வங்கி, ஹற்டன் நெஷனல் வங்கி, | 10.3 | 2.0 |

## அரசுடமை தொழில் முயற்சிகளுக்கான (வங்கிகள்) மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

2007 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கம் நிதியைத் திரட்டுவதற்காக சர்வதேச மூலதனச் சந்தைக்குள் பிரவேசித்துள்ள முறையிலேயே 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா விமான சேவைகள் கம்பனி 2019 ஆண்டில் முதிர்வடையவுள்ள 5 வருட முதிர்வு காலத்தைக் கொண்ட ஐஅடொ 175 மில்லியன் பெறுமதியான சர்வதேச நாணய முறியை இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் உத்தரவாதமொன்றுடன் 5.3 சதவீத நிலையான வட்டி வீதமொன்றுடன் வழங்கப்பட்டது.

மேலும், பிச் கடன் தரப்படுத்தல் ஏஏஏ தரத்தினைப் பெற்றுக் கொண்ட ஒரே உள்நாட்டு வங்கியான தேசிய சேமிப்பு வங்கி 2014 ஆண்டு செப்தெம்பர் மாதம் 10 ஆமி திகதி பீ+(எஸ் & பீ) மற்றும் பீபீ-(பிச் வழங்கப்பட்ட தரத்துடன்) 5 வருட முதிர்வு காலத்துடனான ஐ.அடொ 250 மில்லியன் பெறுமதியான சர்வதேச அரச முறியை 5.15 சதவீத வட்டி வீதத்துக்கு வழங்கப்பட்டது. இந்நாணய முறியின் வருவாய் வங்கியின் மூலதனச் சொத்துக்களில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**இலங்கை சர்வதேச நாணய முறிகளை வழங்கலின் விபரங்கள்**

| பெயர் | வழங்கப்பட்ட திகதி | தரப்படுத்தல் * | பெறுமதித் தொகை ஐஅடொ மில்லியன் | கூப்பன் பெறுமதி ( %) | முதிர்வுக் காலம் (வருடங் கள்) | முதிர்வுத் திகதி e | 31.12. 2014 ஆம் திகதியில் விலை | 31.12.2014 (%) ஆம் திகதியில் விளைவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி’17 | 03/05/2012 | --/--/பீபீ- | 500 | 6.875 | 05 | 03/05/17 | 103.4 | 5.306 |
| இலங்கை வங்கி’18 இலங்கை வங்கி’18 | 16/04/2013 | --/--/பீபீ- | 500 | 5.325 | 05 | 16/04/18 | 99.4 | 5.533 |
| தேசிய சேமிப்பு வங்கி’18 | 18/09/2013 | --/பீ+/பீபீ- | 750 | 8.875 | 05 | 18/09/18 | 111.0 | 5.539 |
| டீஎப்சீசீ’18 | 31/10/2013 | --/பீ/பீ+ | 100 | 9.625 | 05 | 31/10/18 | 106.4 | 7.661 |
| விமான சேவைகள் | 23/06/2014 | --/பீ+/பீபீ- | 175 | 5.300 | 05 | 23/06/19 | 98.7 | 5.620 |
| தேசிய சேமிப்பு வங்கி’’19 | 10/09/2014 | --/பீ+/பீபீ- | 250 | 5.150 | 05 | 10/09/19 | 98.0 | 5.641 |

*மூலம்: பாக்லேஸ் வங்கி * மூடீயின் /எஸ்ஓபீ / பிச்*

## உள்நாட்டுப் படுகடன் மூலதனச் சந்தையைக் கண்காணித்தலும், இலங்கையின் நாணய முறிகளை வழங்குவதற்கான வசதியளித்தலும்

இலங்கை 2007 ஆம் ஆண்டில் 5 வருட முதிர்வுக் காலப்பிரிவுடன் ஐ.அ.டொ 500 மில்லியன் பெறுமதியான சர்வதேச நாணய முறியொன்றை 8.75 சதவீத வட்டிக்கு வழங்குவதன் மூலம் சர்வதேச கடன் மூலதனச் சந்தைக்குள் பிரவேசித்தது. பின்னர், முறையே 2009, 2010, 2011, மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிலும் இலங்கை சர்வதேச கடன் மூலதனச் சந்தையைப் பயன்படுத்தியது.

2013 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிலும், 2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் கடன் மூலதனச் சந்தையை அவதானித்ததன் பின்னர் முறையே 2014 ஜனவரி மாதத்தில் ஐ.அ.டொ 1000 மில்லியன்களும், 2014 ஏப்ரில் மாதத்தில் ஐ.அ.டொ 500 மில்லியன்களும் சர்வதேச நாணய முறிகளை வழங்குவதற்கு வசதியளிக்கப்பட்டது. இந்நாணய முறிகள் முறையே 6 சதவீதத்திலும் மற்றும் 2007 ஆம் ஆண்டில் நாணய முறியை வழங்குதலானது ஆரம்பத்திலிருந்தே இலங்கை நாணய முறியொன்று வழங்கப்பட்ட குறைந்த வட்டி வீதமான 5.125 சதவீத வட்டி வீதத்துக்கு விலை நிர்ணயிக்கப்பட்டது. இரண்டு முறிகளினதும் முதிர்வுக் காலப்பிரிவு 5 வருடங்களாகும்.

**இலங்கை சர்வதேச நாணய முறிகளின் வழங்கல்கள் தொடர்பான விபரங்கள்**

| பெயர் | வழங்கப்பட்ட திகதி | தரப்படுத்தல் (Moody’s/S&P/Fitch) | பெறுமதித் தொகை ஐஅடொ மில்லியன் | கூப்பன் பெறுமதி (%) | முதிர்வுக் காலம் (வருடங்கள்) | முதிர்வுத் திகதி | 31.12. 2014 ஆம் திகதியில் விலை | 31.12.2014 (%) ஆம் திகதியில் விளைவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **SL’12** | 17/10/2007 | --/B+/BB- | 500.0 | 8.250 | 5 | 17/10/12 | *முதிர்வு காலம் முடிவுற்று செலுத்தித் தீர்க்கப்பட்டது* | *முதிர்வு காலம் முடிவுற்று செலுத்தித் தீர்க்கப்பட்டது* |
| **SL’15*** | 22/01/2009 | --/B+/BB- | 500.0 | 7.400 | 6 | 22/01/15 | *முதிர்வு காலம் முடிவுற்று செலுத்தித் தீர்க்கப்பட்டது ** | *முதிர்வு காலம் முடிவுற்று செலுத்தித் தீர்க்கப்பட்டது ** |
| **SL’19** | 06/01/2014 | B1/B+/BB- | 1,000.0 | 6.000 | 5 | 14/01/19 | 103.7 | 4.959 |
| **SL’19** | 07/04/2014 | B1/B+/BB- | 500.0 | 5.125 | 5 | 07/04/19 | 100.0 | 5.123 |
| **SL’20** | 30/10/2010 | B1/B+/BB- | 1,000.0 | 6.250 | 10 | 30/10/20 | 103.0 | 5.629 |
| **SL’21** | 27/07/2011 | B1/B+/BB- | 1,000.0 | 6.250 | 10 | 27/07/21 | 103.0 | 5.694 |
| **SL’22** | 25/07/2012 | B1/B+/BB- | 1,000.0 | 5.875 | 10 | 25/07/22 | 101.4 | 5..648 |

***மூலம்:**: பாக்லேஸ் வங்கி, எச்எஸ்பீசீ, சிட்டி வங்கி (Joint Lead Managers for the Issuances)*

**2015 ஜனவரி மாதத்தில் முதிர்வு காலம் முடிந்து செலுத்தித் தீர்க்கப்பட்டது*

# படுகடன் முகாமைத்துவப் பிரிவு

## படுகடன் முகாமைத்துவப் பிரிவின் பங்கு

- இப்பிரிவானது பொதுநலவாயச் செயலகப் படு கடன் முகாமைத்துவ பதிவு முறைமை (CS-DRMS) தரவு அடிப்படை என அழைக்கப்படும் படுகடன் முகாமைத்துவ முறைமைக்கான புதிய அர்ப்பணிப்புக்களின் விபரங்களைப் பதிவு செய்தலும், படுகடன் / நன்கொடை அர்ப்பணிப்புக்களின் இரத்துச் செய்தல்கள், விரிவாக்கம், பெற்றுக் கொள்ளும் காலப்பிரிவுகளின் நீடிப்பு போன்ற தொடர்புடைய இன்னோரன்ன விபரங்களைப் புதுப்பித்தல்.
- பொதுநலவாயச் செயலகக் படுகடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு ஏற்ப, கொடுப்பனவுகளுக்கான மதிப்பீடுகளின் பெறுமதிகளை கடன் வழங்கும் அபிவிருத்திப் பங்காளர்களின் பெறுமதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தலும், இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகையினை உரிய நேரத்தில் செலுத்துவது தொடர்பாக அவசியமான பரிந்துரைகளை முன் வைத்தல்.
- பொதுநலவாயச் செயலகக் படுகடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு ஏற்ப, கொடுப்பனவுகளுக்கான மதிப்பீடுகளின் பெறுமதிகளை கடன் வழங்கும் அபிவிருத்திப் பங்காளர்களின் பெறுமதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் படி வேறுபாடுகள் ஏதுமிருப்பின் அது தொடர்பாக குறிப்பிட்ட பிரிவின் மூலம் உறுதிப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- கடன் உடன்படிக்கைகள் தொடர்பான பகிர்வுகள், கடன் மீள் கொடுப்பனவுகள், வட்டிக் கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு உட்படுத்தல்.
- புதிய கடன் அர்ப்பணிப்புக்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான சுருக்கத்தினைத் தயாரித்தலும், மற்றும் அவற்றை கடன் உடன்படிக்கைகளின் பிரதிகளுடன் இலங்கை மத்திய வங்கியின் பொருளியல் ஆய்வுத் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்தல். கடன் / நன்கொடை உடன்படிக்கைகளின் பட்டியல் ஒன்றைப் பிரசுரித்தல்.
- படுகடன் புள்ளி விபரங்களைத் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்துக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்குதலும், பகிர்வுகள் தொடர்பாக (கருத்திட்ட வாரியான) பொதுநலவாயச் செயலகக் படுகடன் முகாமைத்துவ பதிவு முறைமையிலிருந்து தயாரிக்கப்பட்ட 814 அறிக்கைகளை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பொது இணையத்தளத்தில் வெளியிடல்.
- வெளிநாட்டு உதவி மீளாய்வு, வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான செயலாற்ற அறிக்கை, வருடாந்த அறிக்கை, வரவு செலவுத்திட்ட வெளியீடு மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பாக அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்ளலும், ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளலும்.
- வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளினாலும், ஏனைய திறைசேரித் திணைக்களங்களினாலும் வேண்டப்பட்ட இலங்கையில் வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான அவசியமான பொருளாதார ஆய்வு ரீதியான அறிக்கைகளையும், தரவுகளையும் உரிய நேரத்திலும் திருப்திகரமான மட்டத்திலும் பூர்த்தி செய்தல்.
- வெளிநாட்டு அரசாங்கக் கடன்கள் தொடர்பான பாராளுமன்றக் கேள்விகளுக்குப் பதில்களைத் தயாரித்தல்.
- பொதுநலவாயச் செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட "Horizon" எனும் கடன் முகாமைத்துவம் மற்றும் ஆய்வுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட வேண்டிய தேவையான படிவங்களில் இலங்கை மத்திய வங்கிக்கான பொதுநலவாயச் செயலகப் படு கடன் முகாமைத்துவ பதிவு முறைமையில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் தரவுகளை வழங்கல்.
- வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான விடயங்களுக்கு கௌரவ நிதித் திட்டமிடல் அமைச்சிற்கான அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானங்களைத் தயாரித்தல்.
- வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் குறிப்பிட்ட பிரிவின் ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட அபிவிருத்திப் பங்காளர் நிறுவனங்களுடன் தொடர்ந்து செயற்படல்.
- வெளிநாட்டு நிதியீடு மற்றும் படுகடன் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் திறைசேரிச் செயலாளரிடம் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து மேற்கொள்ளப்படும் வேண்டுகோள்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல.
- நாட்டின் படுகடன் முகாமைத்துவத்தின் இயலளவினை விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் வேண்டுகோளின் பேரிலும் பொதுநலவாயச் செயலகத்தின் சார்பில் வருகை தரும் தூதுவர் குழுக்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் படுகடன் தரவுகளை பிரசுரிக்கும் நோக்குடன் காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளி விபரங்களின் முன்னெடுப்புக்களின் ஊடாக உலக வங்கியினாலும், சர்வதேச நாணய நிதியினாலும் வேண்டப்பட்ட தனிப்பட்ட படிவங்களில் காலாண்டு அடிப்படையில் வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான தரவுகளை வெளியிடல்.

## 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

- 2014 ஆம் ஆண்டு தொடர்பான பொதுநலவாயச் செயலகப் படு கடன் முகாமைத்துவ பதிவு முறைமை (CS-DRMS) தரவு அடிப்படையில் புதிய அர்ப்பணிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.

- பொதுநலவாயச் செயலகப் படு கடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு ஏற்ப, கொடுப்பனவுகளுக்கான மதிப்பீடுகளின் பெறுமதிகளை கடன் வழங்கும் அபிவிருத்திப் பங்காளர்களின் பெறுமதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு, இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகையினை உரிய நேரத்தில செலுத்துவது தொடர்பாக அவசியமான பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டன.
- பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு ஏற்ப, கொடுப்பனவுகளுக்கான மதிப்பீடுகளின் பெறுமதிகளை கடன் வழங்கும் அபிவிருத்திப் பங்காளர்களின் பெறுமதிகளுடன் ஒப்பிட்டுப் பாரத்து, கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் படியுள்ள வேறுபாடுகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரிவின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- 2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமையில் உள்ள கடன் உடன்படிக்கைகள் தொடர்பான பகிர்வுகள், கடன் மீளச் செலுத்தல்கள், வட்டிக் கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு உட்படுத்தப்பட்டன.

- 2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில், புதிய கடன் அர்ப்பணிப்புக்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான கடன் / நன்கொடை உடன்படிக்கைகளின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.

- வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளினாலும், ஏனைய திறைசேரித் திணைக்களங்களினாலும் வேண்டப்பட்ட இலங்கையில் வெளிநாட்டுக் கடன் தொடர்பான அவசியமான பொருளாதார ஆய்வு ரீதியான அறிக்கைகளையும், தரவுகளையும் உரிய நேரத்தில் வழங்கப்பட்டது.

- பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமையிலிருந்து தயாரிக்கப்பட்ட 814 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பொது இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன.

- 2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில், வெளிநாட்டுக் கடன் தொடர்பான செயலாற்ற அறிக்கை, வருடாந்த அறிக்கை, வரவு செலவுத்திட்ட வெளியீடு மற்றும் ஏனைய வெளியீடுகள் தயாரிக்கப்பட்டன.

- வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளினாலும், ஏனைய திறைசேரித் திணைக்களங்களினாலும் வேண்டப்பட்ட இலங்கையில் வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான அவசியமான பொருளாதார ஆய்வு ரீதியான அறிக்கைகளையும், தரவுகளையும் உரிய நேரத்தில் வழங்கப்பட்டது.

- வெளிநாட்டு அரசாங்கக் கடன்கள் தொடர்பான 5 பாராளுமன்றக் கேள்விகளுக்கு பதில்கள் தயாரிக்கப்பட்டன.

- பொதுநலவாயச் செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட "Horizon" எனும் கடன் முகாமைத்துவம் மற்றும் ஆய்வுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட வேண்டிய தேவையான படிவங்களில் இலங்கை மத்திய வங்கிக்கான பொதுநலவாயச் செயலகப் படு கடன் முகாமைத்துவ பதிவு முறைமையில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கடன் தரவுகள் வழங்கப்பட்டன.

- வெளிநாட்டுப் படு கடன்கள் தொடர்பான பிரச்சினைகளுககான விபரங்களை, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் குறிப்பிட்ட பிரிவின் ஊடாக அபிவிருத்திப் பங்காளர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டதோடு, அவ்விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- வெளிநாட்டு நிதி மற்றும் கடன் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் திறைசேரிச் செயலாளரிடம் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து மேற்கொள்ளப்படும் வேண்டுகோள்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்கப்பட்டன.

- நாட்டின் படுகடன் முகாமைத்துவத்தின் இயலளவினை விருத்தி செய்யும் நோக்குடன் பொதுநலவாயச் செயலகத்திலிருந்தும், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியிலிருந்தும் 2 தூதுவர் குழுக்கள் வருகை தந்தன.

- சர்வதேச நாணய நிதியம் / உலக வங்கியினாலும் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களுக்கிணங்க, காலாண்டு அடிப்படையில் வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான தேவையான தரவுகள் வழங்கப்பட்டன.

# கொள்கைத் திட்டமிடல் பிரிவு

## கொள்கைத் திட்டமிடல் பிரிவின் பங்கு

இப்பிரிவானது, வெளிநாட்டு உதவி ஒன்றிணைப்பினை மேம்படுத்தல், வெளிநாட்டு நிதியை ஒன்று திரட்டுதல், வெளிநாட்டு உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின் முகாமைத்துவம், மற்றும் அரசாங்க அபிவிருத்தி கொள்கைச் சட்டகத்தின் பிரகாரம் இனங்காணப்பட்ட முன்னுரிமைக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்கான புதிய வெளிநாட்டு நிதிய வளங்களைக் கவர்தல் ஆகிய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக உள்ளது:

- அரசாங்க அபிவிருத்தி முன்னெடுப்புக்களாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுககு அவசியமான நிதி வசதிகளை வழங்குவதற்கு நிரல் அமைச்சுக்களுடனும் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்களுடனும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகளுக்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சிபாரிசுகளை பெற்றுக் கொள்ளல்.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகளை வெளிநாட்டு நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக சிரேஷ்ட பணியாளரின் ஆலோசனையுடன் சாத்தியமான அபிவிருத்திப் பங்காளர்களின் பிரிவுக்குச் சமர்ப்பித்தல்.
- வெளிநாட்டு உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய புதுப்பிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைத் தொகுதியினை தயாரித்தலும், பராமரித்தலும்.
- வெளியீடுகளையும், வெளிநாட்டு உதவி மீளாய்வு, செயலாற்றுகை அறிக்கை மற்றும் திணைக்களத்தின் வரவு செலவுத்திட்ட வெளியீடு ஆகியவற்றைத் தயாரித்தலும், ஒருங்கிணைத்தலும் வெளியிடலும்.
- நிதித் திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கைக்கான வெளிநாட்டு நிதியளிப்பு அத்தியாயத்திற்கான உள்ளீடுகளை வழங்குதல்.
- வெளிநாட்டு உதவியின் பயன்பாடு தொடர்பாக அவசியமான சுற்றறிக்கைகளைப் பிரசுரித்தல்.
- நிதித் திட்டமிடல் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அமைசசரவை விஞ்ஞாபனம் தொடர்பாக அமைச்சரவை அவதானிப்புக்களை வழங்குவதற்கு ஒருங்கிணைப்புச் செய்தல்.
- வெளிநாட்டு உதவி தொடர்பான கூட்டங்கள் மற்றும் அபிவிருத்திச் சம்மேளனங்களுக்கு ஒருங்கிணைப்புச் செய்தல்.
- இலங்கையில் வெளிநாட்டு நிதியீடு தொடர்பான தேவையான பொருளாதார ஆய்வு அறிக்கைகளும், தரவுகளும் உரிய நேரத்திலும் திருப்திகரமான மட்டத்திலும் தொகுத்தல்.

## 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

- 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.
- நிதித்திட்டமிடல் அமைச்சின் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைக்கான வெளிநாட்டு நிதியளிப்பு அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட 68 கருத்திட்டப் பிரேரணைகளை வெளிநாட்டு நிதியினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்திப் பங்காளர்களின் பிரிவுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு (MOUs)அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- வெளிநாட்டு உதவியினைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.
- இலங்கையில் வெளிநாட்டு நிதியீட்டுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட பொருளாதார ஆய்வு அறிக்கைகளும், தரவுகளும் உரிய நேரத்திலும் திருப்திகரமான மட்டத்திலும் தயாரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டன.

# நிதி ரீதியான மீளாய்வு

## செலவினம் தொடர்பான நிதி ரீதியான தகவல்கள்

இத்திணைக்களம் ஈட்டிக் கொடுக்கும் நிறுவனமாக இனங்காணப்படவில்லை. எனவே, கீழே 2014 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத் தலைப்பு இலக்கம் 239 இன் கீழான ஆளுக்கான வேதனாதிகள் தொடர்பான ஒதுக்கீடு எதிரான செலவினங்கள் மீதான நிதி ரீதியான தகவல்கள், ஏனைய மீண்டெழும் செலவுகள், மூலதனச் செலவினம், மற்றும் திணைக்களத்தின் முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் பின்வரும் அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன.

**ஆளுக்கான வேதனாதிகள்**

| | ரூபா.. |
|---|---|
| மூல ஒதுக்கீடுகள் | 40,900,000 |
| **கூட்டு :** | |
| குறை நிரப்பு ஒதுக்கீடு | 5,204,000 |
| நிதி ஒழுங்குகள். 66 மற்றும் 69 இன் கீழான மாற்றல்கள் | 71,840 |
| **கழி:** | |
| நிதி ஒழுங்குகள். 66இன் கீழான மாற்றல்கள் | - |
| **மொத்த ஒதுக்கீடு** | 46,175,840 |
| குறிப்பிட்ட ஆண்டிற்கான மொத்த செலவினம் | 46,174,213 |

**ஏனைய மீளெழுஞ் செலவுகள்**

| | ரூபா . |
|---|---|
| மூல ஒதுக்கீடுகள் | 215,000,000 |
| **கூட்டு :** | |
| குறை நிரப்பு ஒதுக்கீடு | 3,794,000 |
| நிதி ஒழுங்குகள். 66 மற்றும் 69 இன் கீழான மாற்றல்கள் | - |
| **கழி:** | |
| நிதி ஒழுங்குகள். 66இன் கீழான மாற்றல்கள் | (71,840) |
| **மொத்த ஒதுக்கீடு** | 218,722,160 |
| குறிப்பிட்ட ஆண்டிற்கான மொத்த செலவினம் | 138,702,484 |

**மூலதனச் செலவினம்**

| செலவு விடயக் குறியீடு | செலவு விடயத் தலைப்பு | 2014 ஒதுக்கீடு ரூபா | 2014 தேறிய ஒதுக்கீடு ரூபா | செலவினம் ரூபா. |
|---|---|---|---|---|
| 2002 | பொறித் தொகுதி, இயந்திராதிகள், மற்றும் உபகரணங்களின் புனருத்தாரணங்களும், மேம்படுத்தல்களும் | 600,000 | 600,000 | 492,977 |
| 2003 | வாகனங்களின் திருத்தங்களும், மற்றும் மேம்படுத்தல்களும் | 1,000,000 | 1,000,000 | 653,545 |
| 2102 | தளபாடங்களினதும், அலுவலக உபகரணங்களினதும் கொள்வனவு | 200,000 | 173,194 | 161,016 |
| 2103 | பொறிகளும், இயந்திரங்களும், உபகரணங்களும் | 3,200,000 | 3,125,180 | 3,125,176 |
| 2204(21) | ஆசிய அபிவிருத்தி வங்கி - சாதாரண மூலதன அதிகரிப்பு | 521,000,000 | 521,000,000 | 516,481,703 |
| 2204-2- (11) | மாலை தீவில் வீதியொன்றின் நிர்மாணம் | 310,769,000 | 280,769,000 | 128,296,716 |
| 2204-3- (11) | உகண்டாவில் தொழில்சார் மற்றும் பயிற்சி நிலையம் | 20,000,000 | 50,000,000 | 18,415,026 |
| 2204-5- (11) | உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்துக்கான உணவு உதவி | 400,000,000 | 400,000,000 | 219,839,869 |
| 2401 | பயிற்சியும், இயலளவுக் கட்டமைப்பும் | 1,100,000 | 1,201,626 | 1,201,625 |
| 2502 (17) | வெளிநாட்டு தூதுவர் இல்லங்களுக்கான பெசேவரியின் மீள் கொடுப்பனவு | 5,000,000 | 5,000,000 | 1,642,202 |
| 2502-4-(13) | வெளிநாட்டு மாற்றல்கள் – (முதலீடு) | 9,380,000 | 9,380,000 | 0 |
| | **மொத்தம்** | **1,272,249,000** | **1,272,249,000** | **890,309,855** |

**வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் பயன்பாட்டின் சுருக்கம்**

| செலவினத்ததின் விபரம் | 2014 ஒதுக்கீடு ரூபா | 2014 தேறிய ஒதுக்கீடு ரூபா | 2014 உண்மைச் செலவினம் ரூபா |
|---|---|---|---|
| மீண்டெளும் செலவினம் | 255,900,000 | 264,898,000 | 184,876,697 |
| மூலதனச் செலவினம் | 1,272,249,000 | 1,272,249,000 | 890,309,855 |
| **மொத்தம்** | **1,528,149,000** | **1,537,147,000** | **1,075,186,552** |

## அரச ஊழியர்களின் முற்பணக் கணக்குகள்

2014 ஆம் ஆண்டிற்கான இத்திணைக்களத்தின் அரச ஊழியர்களுக்குக் கடன்களை வழங்குவதற்கான முற்பணக் கணக்கின் விபரங்கள் கொன்றை கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூபா | உண்மைச் செலவினம் ரூபா. |
|---|---|---|
| செலவினத்தின் உச்ச எல்லை | 4,500,000 | 4,497,735 |
| வரவுகளின் குறைந்த எல்லை | 2,500,000 | 3,185,811 |
| கடன் மீதியின் உச்ச எல்லை | 30,000,000 | 18,154,668 |

## கணக்காய்வாளர் நாயகத்தின் விசாரணைகள்

குறிப்பிட்ட ஆண்டில், நிதித் திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திடமிருந்து 6 கணக்காய்வு விசாரணைகளும், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்திடமிருந்து 6 கணக்காய்வு விசாரணைகளும், கிடைக்கப் பெற்றதோடு, சகல விசாரணைகளுக்கும் விடையளிக்கப்பட்டன..

## 2014 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கு

2014 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

# 2014 இல் கைச்சாத்திடப்பட்ட வெளிநாட்டு நிதியீட்டின் கடன் உடன்படிக்கைகளின் பட்டியலும், அவற்றின் நிதிசார் நியதிகளும்

| அபிவிருத்திப் பங்காளர் / கடன் வழங்கும் நிறுவனம் | உடன்படிக்கைத் திகதி | கருத்திட்டம் | கடன் தொகை | | | | வருடாந்த வட்டி வீதம் | | எல்லை (100 அடிப்படை புள்ளி விபரங்கள்) | அர்ப்பணிப்புக் கட்டணம் (பகிரப்படாத மீதியிலிருந்து ) | ஏனைய கொடுப்பனவுகள் | தயவுக் காலப்பிரிவு (வருடங்கள் ) | முதிர்வு (தயவுக் காலப்பிரிவு உட்பட) (வருடங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நாணயம் | தொகை | ரூபா மில்லியன் | ஐ அ டொ மில்லியன் | வட்டியின் வகை | வீதம் (%) | | | | | |
| **இரு தரப்பு** | | | | | | | | | | | | | |
| **ஜப்பான்** | 28/03/2014 | களனிப் பாலத்தின் மேம் பாலத்தின் நிர்மாணம் | ஜப்பானிய யென் | 35,040 | 44,808.10 | 342.8 | நிலையானது | கட்டம் 1 - 0.10%<br>கட்டம் 2- 0.01% | பொருத்தமற்றது | _ | ஆரம்பக் கட்டணம் (கடன் தொகையில் 0.2% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும் ) | 10 | 40 |
| | 23/08/2014 | எண்ணியல் புவிப்பரவு தொலைக்காட்சி ஒலிபரப்புக் கருத்திட்டம் - ரூ - சங்கய ” | ஜப்பானிய யென் | 13717 | 17,199.76 | 132.1 | நிலையானது | கட்டம் 1–0.10%<br>கட்டம் 2 –0.01% | பொருத்தமற்றது | | ஆரம்பக் கட்டணம் (கடன் தொகையில் 0.2% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும் ) | 10 | 40 |
| **சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனம் (CDB)** | 11/03/2014 | முன்னுரிமை பெற்ற வீதிகளின் விருத்தி மற்றும் புனருத்தாரணக் கருத்திட்டம் 3 (கட்டம் I) | ஐஅடொ | 300 | 39,166.44 | 300 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதம்) | 2.95% | _ | முகாமைத்துவக் கட்டணம் (கடன் தொகையில் 0.5% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும் ) | 3 | 15 |
| | 24/11/2014 | வீதிகளின் விருத்தி மற்றும் புனருத்தாரணக் கருத்திட்டம் 3 (கட்டம் I) | ஐஅடொ | 100 | 13,100.00 | 100 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதம்) | 2.95% | _ | முகாமைத்துவக் கட்டணம் (கடன் தொகையில் 0.5% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும் ) | 3 | 15 |
| **பிரான்ஸ்** | 29/09/2014 | அம்பத்தளை நீர் வழங்கல் திட்டத்தின் விருத்தியும், சக்திச் சேமிப்புக் கருத்திட்டம் | ஐஅடொ | 70 | 9,124.50 | 70 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதம்) | 1.76% | 0.50% | ஆரம்பக் கட்டணம் (கடன் தொகையில் 0.5% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும்) | 7 | 25 |
| **கொரியா** | 30/12/2014 | தெதுறு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம் | ஐஅடொ | 58,155.00 | 7,622.83 | 58.15 | நிலையானது | 0.15% | பொருத்தமற்றது | _ | _ | 10 | 40 |
| | 30/12/2014 | ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டம் | ஐஅடொ | 20.53 | 2,691.02 | 20.53 | நிலையானது | 0.15% | பொருத்தமற்றது | _ | _ | 10 | 40 |
| **ஆராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதி (KFAED)** | 30/01/2014 | 25 பாலங்களின் புனர் நிர்மாணம் | குவைட் தினார் | 10 | 4,630.10 | 35.4 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | 0.50% | _ | 5 | 25 |
| **ஏற்றுமதிக் கடன்கள்** | | | | | | | | | | | | | |
| **பெல்ஜியம் கேபீசீ வங்கி** | 16/01/2014 | மொனராகலை – புத்தளை நீர் வழங்கல் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் | யூரோ | 12.99 | 2,291.76 | 17.6 | நிலையானது | 1.20% | பொருத்தமற்றது | 0.50% | - | 2.5 | 10 |
| **சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி** | 16/09/2014 | வேளிவட்ட அதிவேகப்பாதையின் நிர்மாணக் கருத்திட்டம் -கட்டம் III | ஐஅடொ | 494.03 | 64,363.19 | 494.03 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | 0.25% | முகாமைத்துவக் கட்டணம் (கடன் தொகையில் 0.25% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும் ) | 5 | 20 |
| | 16/09/2014 | தெற்கு அதிவேகப்பாதையின் நீடிப்பு – பிரிவு 4 இலிருந்து மத்தளையிலிருந்து அம்பாந்தோட்டை வரை | சீன யுவான் | 2,528.17 | 53,585.87 | 411.4 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | 0.25% | முகாமைத்துவக் கட்டணம் (கடன் தொகையில் 0.25% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும் ) | 5 | 20 |

## 2014 இல் கைச்சாத்திடப்பட்ட வெளிநாட்டு நிதியீட்டின் கடன் உடன்படிக்கைகளின் பட்டியலும், அவற்றின் நிதிசார் நியதிகளும் தொடர்ச்சி...

| அபிவிருத்திப் பங்காளர் / கடன் வழங்கும் நிறுவனம் | உடன்படிக்கைத் திகதி | கருத்திட்டம் | கடன் தொகை | | | | வருடாந்த வட்டி வீதம் | | எல்லை (100 அடிப்படை புள்ளி விபரங்கள்) | அர்ப்பணிப்புக் கட்டணம் (பகிரப்படாத மீதியிலிருந்து) | ஏனைய கொடுப்பனவுகள் | தயவுக் காலப்பிரிவு (வருடங்கள்) | முதிர்வு (தயவுக் காலப்பிரிவு உட்பட) (வருடங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நாணயம் | தொகை | ரூபா மில்லியன் | ஐ அ டொ மில்லியன் | வட்டியின் வகை | வீதம் (%) | | | | | |
| சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 16/09/2014 | அம்பாந்தோட்டை கேந்திர அபிவிருத்திக் கருத்திட்டம் | சீன யுவான் | 1,555.99 | 32,980.10 | 253.2 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | 0.25% | முகாமைத்துவக் கட்டணம் (கடன் தொகையில் 0.25% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும்) | 5 | 20 |
| | 09/12/2014 | தெற்கு அதி வேகப்பாதையின் நீடிப்பு – பிரிவு 1 மாத்தறையிலிருந்து பெலியத்தை வரை | ஐஅடொ | 684.00 | 89,538.03 | 683.49 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | 0.25% | முகாமைத்துவக் கட்டணம் (கடன் தொகையில் 0.25% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும்) | 5 | 20 |
| ஐக்கிய இராச்சியத்தின் டச்சு வங்கி | 10/10/2014 | 537 கிராமிய இரும்புப் பாலங்களின் நிர்மாணம் | ஐஅடொ | 161.2 | 21,074.17 | 161.7 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதம்) | 1.5% (ஏற்றுமதிக் கடன்) 4.15 % (வர்த்தகக் கடன்) | 0.25% | ஏற்பாட்டுக் கடன் (கடன் தொகையில் 0.5% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும்) | 3 | 13 |
| கோப் சென்ட்ரலே ரைபெய்சென் போரன்லீன்பேங்க் | 10/10/2014 | இலங்கை பாற்பண்ணை அபிவிருத்திக் கருத்திட்டம் கட்டம் II | ஐஅடொ | 17.6 | 2,298.09 | 17.6 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதம்) | 2.00% | 0.25% | முகாமைத்துவக் கட்டணம் (கடன் தொகையில் 0.25% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும்) | 2 | 10 |
| | 14/11/2014 | இலங்கை பாற்பண்ணை அபிவிருத்திக் கருத்திட்டம் கட்டம் II | ஐஅடொ | 3.1 | 407.52 | 3.1 | நிலையானது | 5.00% | பொருத்தமற்றது | 0.25% | முகாமைத்துவக் கட்டணம் (கடன் தொகையில் 0.25% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும்) | 2.5 | 3.5 |
| | 05/12/2014 | 463 கிராமிய இரும்புப் பாலங்களின் நிர்மாணம் | யூரோ | 105 | 17,026.93 | 129.95 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதம்) | 1.45% (ஏற்றுமதிக் கடன்) 4% (வர்த்தகக் கடன்) | 0.25% | முகாமைத்துவக் கட்டணம் (கடன் தொகையில் 0.5% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும்) | 2.5 | 12.5 |
| பல் தரப்பு | | | | | | | | | | | | | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 27/05/2014 | திறன்கள் துறை விருத்தி நிகழ்ச்சித் திட்டம் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட கடன் வாங்கல் | ஐஅடொ | 50 | 6,520.70 | 50 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதம்) | 0.60% | 0.15% | - | 5 | 26 |
| | 27/05/2014 | திறன்கள் துறை விருத்தி நிகழ்ச்சித் திட்டம் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட கடன் வாங்கல் | விஎஉ | 32.6 | 6,597.71 | 50.6 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | - | - | 5 | 25 |
| | 27/05/2014 | தெற்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் | ஐஅடொ | 70 | 9,129.06 | 70 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதம்) | 0.60% | 0.15% | - | 5 | 26 |
| | 27/05/2014 | தெற்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் | விஎஉ | 3.32 | 673.8 | 5.2 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | - | - | 5 | 25 |
| | 06/03/2014 | பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் 2 | ஐஅடொ | 70 | 9,124.70 | 70 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதம்) | 0.60% | 0.15% | - | 5 | 26 |
| | 06/03/2014 | பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் 2 | விஎஉ | 11.83 | 2,376.90 | 18.2 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | - | - | 5 | 25 |
| | 05/11/2014 | ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் கட்டம் 1 | விஎஉ | 64.77 | 12,527.88 | 95.74 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | - | - | 5 | 25 |

## 2014 இல் கைச்சாத்திடப்பட்ட வெளிநாட்டு நிதியீட்டின் கடன் உடன்படிக்கைகளின் பட்டியலும், அவற்றின் நிதிசார் நியதிகளும் தொடர்ச்சி ....

| அபிவிருத்திப் பங்காளர் / கடன் வழங்கும் நிறுவனம் | உடன்படிக்கைத் திகதி | கருத்திட்டம் | கடன் தொகை | | | | வருடாந்த வட்டி வீதம் | | எல்லை (100 அடிப்படை புள்ளி விபரங்கள்) | அர்ப்பணிப்புக் கட்டணம் (பகிரப்படாத மீதியிலிருந்து ) | ஏனைய கொடுப்பனவுகள் | தயவுக் காலப்பிரிவு (வருடங்கள் ) | முதிர்வு (தயவுக் காலப்பிரிவு உட்பட) (வருடங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நாணயம் | தொகை | ரூபா மில்லியன் | ஐ அ டொ மில்லியன் | வட்டியின் வகை | வீதம் (%) | | | | | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 20/11/2014 | பச்சைச் சக்தி அபிவிருத்தியும், வலு வினைத்திறன் விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் | விவஉ | 18.76 | 3,630.29 | 27.7 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | - | - | 5 | 25 |
| | 20/11/2014 | பச்சைச் சக்தி அபிவிருத்தியும், வலு வினைத்திறன் விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் | ஐஅடொ | 121 | 15,851.00 | 121 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இ.ற்கான 6 மாதம்) | 0.60% | 0.15% | - | 5 | 26 |
| உலக வங்கியின் புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி (IBRD) | 10/07/2014 | காலநிலை மீட்டெழுச்சி விருத்தி நிகழ்ச்சித் திட்டம் | ஐஅடொ | 102 | 13,282.50 | 102 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இ.ற்கான 6 மாதம்) | 0.63% | - | ஆரம்பக் கட்டணம் (கடன் தொகையில் 0.25% ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டும் ;) | 3 | 20 |
| உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு | 10/07/2014 | அவசர அனர்த்தத்திற்கான விஷேட கடன் நிகழ்ச்சித் திட்டம் | விவஉ | 71.7 | 14,442.70 | 110.9 | நிலையானது | 1.25% | பொருத்தமற்றது | 0.50% | தீர்ப்பனவுக் கட்டணங்கள் (0.75%) | 5 | 25 |
| | 12/09/2014 | உபாய ரீதியான நகரங்களின் அபிவிருத்திக் கருத்திட்டம் | விவஉ | 95 | 18,780.36 | 144.2 | நிலையானது | 1.25% | பொருத்தமற்றது | 0.50% | தீர்ப்பனவுக் கட்டணங்கள் (0.75%) | 5 | 25 |
| | 12/09/2014 | அணை பாதுகாப்பும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்திற்கான மேலதிக நிதி | விவஉ | 53.7 | 10,615.84 | 81.5 | நிலையானது | 1.25% | பொருத்தமற்றது | 0.50% | தீர்ப்பனவுக் கட்டணங்கள் (0.75%) | 5 | 25 |
| | 12/09/2014 | திறன்கள் அபிவிருத்திக் கருத்திட்டம் (பிரிவு ஆ) | விவஉ | 14.1 | 2,787.4 | 21.4 | நிலையானது | 1.40% | பொருத்தமற்றது | 0.50% | தீர்ப்பனவுக் கட்டணங்கள் (0.75%) | 5 | 25 |
| | 12/09/2014 | திறன்கள் அபிவிருத்திக் கருத்திட்டம் (பிரிவு அ) | விவஉ | 51.6 | 10,200.70 | 78.3 | நிலையானது | 1.25% | பொருத்தமற்றது | 0.50% | தீர்ப்பனவுக் கட்டணங்கள் (0.75%) | 5 | 25 |
| **வர்த்தக வங்கி** | | | | | | | | | | | | | |
| சர்வதேச நாணய முறிகளின் வழங்கல் | 01/01/2014 | நாணய முறிகளின் வழங்கல் | ஐ.அ.டொ | 1,000.00 | 130,681.10 | 1,000.00 | நிலையானது | 6.00% | பொருத்தமற்றது | - | - | - | 5 |
| | 07/04/2014 | நாணய முறிகளின் வழங்கல் | ஐ.அ.டொ | 500 | 65,281.20 | 500.00 | நிலையானது | 5.13% | பொருத்தமற்றது | - | - | - | 5 |
| | | | **மொத்தம்** | | **754,412.3** | **5,777.8** | | | | | | | |

*குறிப்பு : 1. LIBOR = லண்டன் வங்கிகளுக்கு இடையில் வழங்கப்படும் வீதம் (2014 ஜனவரி முதல் டிசம்பர் வரை சராசரி லைபோர் 6 மாதங்களுக்கான வீதம் 0.33 சதவீதம்).*

*2. EURIBOR = ஐரோப்பிய வங்கிகளுக்கு இடையில் வழங்கப்படும் வீதம் (2014 ஜனவரி முதல் டிசம்பர் வரை சராசரி யூரிபோர் 6 மாதங்களுக்கான வீதம் 0.27 சதவீதம்).*

*4. அரசுடமை வர்த்தக தொழில்முயற்சிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன் அர்ப்பணிப்புக்கள் உள்ளடக்கப்படவில்லை*

*5. N/A = பொருத்தமற்றது*

# 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை கைச்சாத்திடப்பட்ட நன்கொடை உடன்படிக்கைகளின் பட்டியல்

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் நிறுவனம் | உடன்படிக்கைத் திகதி | கருத்திட்டம் | நன்கொடைத் தொகை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நாணயம் | மூலத்தொகை மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ அ டொலர் மில்லியன் |
| **இரு தரப்பு** | | | | | | |
| ஜப்பான் | 11/03/2014 | மருத்துவ உபகரணங்களும் நலன்புரி கருவிகளின் பொதி - 2014 | ஜப்பானிய யென | 500 | 631.60 | 4.84 |
| | 26/11/2014 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கருத்திட்டத்தின் வழங்கலுக்கான கருத்திட்டமல்லாத நன்கொடை உதவி - 2014 | ஜப்பானிய யென் | 200 | 222.36 | 1.69 |
| | 02/06/2014 | மனித வளங்களின் அபிவிருத்திப் புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டம் (JDS) - 2014 | ஜப்பானிய யென் | 215 | 274.75 | 2.11 |
| பாகிஸ்தான் | 23/06/2014 | சுகாதார சேவைகள் மத்திய மாகாணம் | ஐஅடொ | 0.017 | 2.21 | 0.017 |
| | 28/05/2014 | வட மாகாணத்தில் உள்நாட்டில் இடம் பெயர்ந்த நபர்களுக்கு 22 வீடுகளை நிர்மாணித்தல் | ஐஅடொ | 0.98 | 128.80 | 0.99 |
| **பல் தரப்பு** | | | | | | |
| உணவு விவசாய நிறுவனம் | 07/01/2014 | கொய்னாப் பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்துவதன் மூலம் உணவுப் பாதுகாப்பை விருத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொடுத்தல் | ஐஅடொ | 0.12 | 16.07 | 0.12 |
| | 12/02/2014 | சார்க் நாடுகளில் தோட்டக்கலை சங்கிலியில் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தல் | ஐஅடொ | 0.48 | 63.70 | 0.49 |
| | 27/03/2014 | பாற்பண்ணைக்குப் பொருத்தமான உணவூட்டும் தொழில்நுட்பங்களை மேம்படுத்தல் | ஐஅடொ | 0.27 | 35.81 | 0.27 |
| | 29/08/2014 | இலங்கையில் கொடுவா மீன் நீரியல் வளத்தினை விருத்தி செய்தல் | ஐஅடொ | 0.34 | 44.92 | 0.34 |
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) | 18/06/2014 | முழுமையான அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் 2014 - 18 | ஐஅடொ | 2.03 | 265.41 | 2.04 |
| | 25/06/2014 | உபாய ரீதியான உதவி – முறையான அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் | ஐஅடொ | 3.00 | 390.00 | 3.00 |
| உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் (World Food Programme) | 05/08/2014 | நீடித்த நிவாரணமும், மீட்புச் செயற்பாடுகளும்(PRRO) | ஐஅடொ | 23.48 | 3,058.07 | 23.48 |
| உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு | 27/05/2014 | அறிவுக் கேந்திரத்தின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையினை மாற்றியமைப்பதற்கான அவுஸ்திரேலிய உதவி மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைப்பின் நன்கொடை (விரிவாக்கம்) | ஐஅடொ | 6.11 | 797.35 | 6.11 |
| | 09/12/2014 | அறிவுக் கேந்திரத்தின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையினை மாற்றியமைப்பதற்கான அவுஸ்திரேலிய உதவி மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைப்பின் நன்கொடை (விரிவாக்கம்) | ஐஅடொ | 10.29 | 1,349.34 | 10.3 |
| | 08/05/2014 | வட கிழக்கு உள்ளூர் சேவைகளின் விருத்திக் கருத்திட்டத்திற்கான மேலதிக நிதி அவுஸ்திரேலிய உதவி மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு - NELSIF | ஐஅடொ | 18.8 | 2,455.28 | 18.8 |
| | 05/08/2014 | வட கிழக்கு உள்ளூர் சேவைகளின் விருத்திக் கருத்திட்டத்திற்கான மேலதிக நிதி அவுஸ்திரேலிய உதவி மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு - NELSIF (விரிவாக்கம்) | ஐஅடொ | 1.5 | 195.34 | 1.5 |
| | 11/07/2014 | அனர்த்தக் குறைப்பும் மீட்பு நடவடிக்கைகளுக்குமான அனர்த்த இடர் முகாமைத்துவக் கருத்திட்டம் | ஐஅடொ | 0.42 | 54.69 | 0.42 |
| | | **மொத்தம்** | | | **9,985.70** | **76.52** |